# சுதந்திரன்

SUTANTIRAN



வள்ளுவர் ஆண்டு 2009
ஐப்பசி 26
ஜுல்ஹஜ் பிறை 10
ஞாயிறு (12-11-1978)
நிறுவிபது 1947
புத்தகம் 88
இதழ் 47

விலை சதம் 60


சுதந்திரன் தனது வாசகர்களுக்குத் தரும் பிரத்தியேகச் செய்தி

# ஐ. நா.வுக்குள் வைகுந்தவாசன் எவ்வாறு நுழைந்தார்?

## தமிழீழம் எப்போது ஐ. நா. உறுப்புரிமை பெற்றது? ஐ. நா. சபைத் தலைவருக்கு ஏற்பட்ட அதிர்ச்சி!

**பலத்த பாதுகாப்புள்ள ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக் கூட்டத்துக்குள் நுழைந்து தமிழ் ஈழ விடுதலை முழக்கமெழுப்பி சரித்திரச் சாதனையை தமிழ் ஈழத்தவரான திரு. வைகுந்தவாசன் அண்மையில் நிலை நாட்டினரல்லவா? திரு. வைகுந்தவாசனால் எப்படி ஐ. நா. சபைக்குள் அவ்வளவு துணிச்சலுடன் கட்டுக்காவலையும் மீறி நுழைய முடிந்தது? அதற்கு அவர் எப்படியெல்லாம் திட்டமிட்டார் என்பது பற்றி நியூயார்க்கிலிருந்து வெளிவரும் "இந்தியா எப்ரோட்" (India Abroad) என்ற ஆங்கில ஏட்டின் அக்டோபர் 20, 1978 இதழில் திரு. பி. பி. கூப்பர் (P.P. Cooper) திரு. வைகுந்தவாசனை பேட்டிகண்டு சுவையான ஒரு கட்டுரையை எழுதியுள்ளார் (Lanka Lawyer Tricks U. N. in pushing Cause) "இலட்சியத்தை உந்தித்தள்ளுவதற்காக இலங்கைத் தமிழ வழக்குரைஞர் ஐ. நா. சபையில் செய்த தந்திரம் என்ற தலைப்பு இக்கட்டுரைக்கு தரப்பட்டுள்ளது.**

அக்கட்டுரையின் தமிழாக்கத்தை இதோ படியுங்கள்!

கிருஷ்ணா வைகுந்தவாசன் அசாதாரணமான ஒரு "சவடால்" பேர்வழி. பல ஆண்டுகளாக அவர் லண்டனில் சட்டத்தரணியாகப் பணியாற்றி வந்திருக்கிறார். அதற்கு முன் சாம்பியாவில் மாவட்ட நீதிபதியாக பணியாற்றியிருக்கிறார். ஆனால் சிறீலங்காவைச் சேர்ந்த 58 வயதுடைய இந்தத்தமிழர், சிறீலங்காவிலிருந்து துண்டாடப்பட்ட ஒரு தனித் தமிழ் நாட்டை அமைக்க வேண்டுமென்ற தனது இலட்சியத்தை வளர்ப்பதற்காக, இரண்டு மணித்துளிகளுக்கு ஐக்கிய நாடுகள் பொதுச்சபை முழுவதையுமே முட்டாளாக்கி விட்டார்!

### அன்று நண்பகலில்

அப்போது நண்பகலாகிக் கொண்டிருந்தது. சைப்பிரஸ் ஜனாதிபதியின் ஒரு மணித்தியாலப்பேச்சையும், அதைத் தொடர்ந்து சூரினாம் நாட்டின் பிரதமரது உரையையும் பொதுச் சபையிலிருந்த 150 நாடுகளைச் சேர்ந்த பேராளர்களும் தமது புலன்களை அடக்கிக்கொண்டு கேட்டபடி அமர்ந்திருந்தார்கள்.

இப்போது சிறீலங்காவின் வெளிநாட்டு அமைச்சர் தனது பேச்சை நிகழ்த்தி முடித்தவுடன். பேராளர்கள் தமது மதிய உணவுக்குச் செல்லத்தயாராக இருந்தார்கள்.

பொதுச் சபையில் உரை நிகழ்த்துவதற்கு ஒரு சம்பிரதாயம் உண்டு. ஒரு குறிப்பிட்ட தினத்தில் யார் யார் பேசப்போகிறார்கள், என்ன பேசப் போகிறார்கள் என்பதை பேராளர்கள் ஒவ்வொருவரும் ஏற்கெனவே அறிந்திருப்பார்கள். பேசப் போகிறவருடைய உரை முன்கூட்டியே அச்சிடப்பட்டு அதன் படிகள் அவர்களுக்கு கிடைத்திருக்கும். தற்போது உலகப் பத்திரிகைகளில் தலைப்புச் செய்தியாக அடிபடும் பிரச்சினைகளைக் கொண்ட நாடொன்றின் பேராளராக ஒரு பேச்சாளர் அமையாத விடத்து, பேராளர்களில் பெரும்பாலோர் தமதுகாதில் பொருத்தும் ஒலி வாங்கியை இயக்குவதில் கூட அக்கறை செலுத்துவதில்லை.

அத்துடன், பொதுச்சபை கூடும் போது; ஏறத்தாழ 2,000 பேராளர்கள் வந்திருப்பார்கள். அவர்களில் ஜனாதிபதிகள், பிரதமர்கள் வெளிநாட்டுஅமைச்சர்கள், ஆகியோர் அவர்களில்இருப்பார்கள். அவர்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் பழகிய முகங்களாக இருக்க மாட்டார்கள். சிறீலங்கா வெளிநாட்டு அமைச்சர் எப்படியிருப்பார் என்று யாருக்காவது அங்கு தெரிந்திருக்குமா என்பது சந்தேகமே.

### மேடையேறினார்

எனவே, பொதுச்சபையின் தலைவர், சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சரை உரையாற்றஅழைத்த நேரத்தில் — தடித்த, தலை நரைத்துக் கொண்டிருக்கும் வைகுந்தவாசன் பேராளர் வரிசையொன்றிலிருந்து எழுந்து சென்று மேடையேறியபோது, சிறீலங்கா

—4-ம் பக்கம் பார்க்க

## அமிரை ஐ. நா.வில் பேசவைக்க 'கிருஷ்ணா' எடுத்த முயற்சிகள்!

## சுதந்திரன் ஆசிரியருக்கு வைகுந்தவாசன் கடிதம்

55, WARREN ROAD,
LONDON SW 19 ZHY
23, அக்டோபர் 78.

அன்புள்ள நண்பர் கோவை மகேசன்,

சுதந்திரனில் நீங்கள் வெளியிட்ட செய்திகளும் அரசியல் மடல் மதிப்பீடும் பார்த்து மிகவும்பூரிப்பு,

ஒவ்வொரு தமிழனும் தத்தம் பங்கைச் செய்தால், நிச்சயம் வெற்றிபெறுவோம்!

இந்தியப் பிரதமர் தேசாய் சென்ற யூனில் லண்டன் வந்திருந்த பொழுதும் நான்தான் இனக்கொலை பற்றிய கேள்வியை அவரிடம் கேட்டது.

இதைத் தொடர்ந்தே ஐ. நா. சபையிலும் பேச்சு நிகழ்த்தினேன்.

வணக்கமும், அன்பும் உரித்தாகுக.

இங்ஙனம்,
கிருஷ்ணா வைகுந்தவாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



க. சுப்பிரமணியம்,
யாழ்ப்பாணம்.

கே: தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் ஏற்பட்டுள்ள நெருக்கடி பற்றி என்ன கூறுகிறீர்கள்?

ப: வரவேற்கிறேன்; நெருக்கடியும், துன்பங்களும் அதிகரிக்கும்போதுதான் உண்மையான இலட்சியவாதிகள் யார், ஏமாற்றுக்காரர்கள் யார், என்பதை அடையாளங்கண்டு கொள்ள முடியும். கூட்டணி என்ற தோட்டத்துக்குள் பயிரோடு சேர்ந்து வளர்ந்த களைகளை இனங்கண்டு கொள்ளமுடியும். ஒரு பரிசுத்தமான விடுதலை இயக்கமாக கூட்டணி தன்னை உருவாக்கிக்கொள்வதற்கும், களைகளைக் களைந்தெறிவதற்கும் இவ்வாருன நெருக்கடிகள் கூட்டணிக்கு உதவும் என்று நம்புகிறேன்.

கே: எல்லாப் பிரச்சினைகளையும் அமிர் வரும்வரை கூட்டணி ஒத்திப்போடுவது ஏன்?

ப: அமிர் ஓர் சர்வாதிகாரியல்ல— இயக்கத்தின் முடிவையே தனது முடிவாக ஏற்றுக்கொள்ளுபவர். ஆயினும், அனுபவம்மிக்க அமிரின் ஆலோசனைகளை கேட்பதற்காகவே, அவர் வரும்வரை கூட்டணித்தலைமை பிரச்சினைகளைப் பின்போட்டிருக்கிறதேதவிர வேறென்றுமல்ல.

கே: முஸ்லிம் ஐக்கிய முன்னணியும் கூட்டணியை கண்டித்து அறிக்கைவிடுகிறதே—

ப: யானை சேற்றுள் சிக்கிக்கொள்ளுமானல், முயலும் ஓர் உதை உதைக்கும் என்பது உங்களுக்குத் தெரியாதா? கூட்டணியைக் கண்டித்து அறிக்கை விடுபவர்களுக்கு ஜே. ஆரிடமிருந்து ஒரு சபாஷ் கிடைக்கும்; சலுகை கிடைக்கும்; அதற்காக இப்படிப்பலர் இன்று புறப்பட்டிருக்கிருர்கள்—

கே: தமிழ் இளைஞர் பேரவையினர் யாழ் முற்றவெளியில் நடத்திய பொதுக் கூட்டம் பற்றி என்னசொல்கிறீர்கள்?

ப: இந்தக் கூட்டத்துக்கு யாழ் பொலிசார் முதலில் அனுமதி வழங்கவில்லையாம்; பின்னர் பிரதமர் பிரேமதாசாவிடம், தொடர்பு கொண்டு பொலிசார் பேசியபோது, இளைஞர்களின் கூட்டத்துக்கு வேண்டிய அளவுக்கு ஒலிபெருக்கி அனுமதி வழங்குமாறு அவர் உத்தரவிட்டாராம். இளைஞர்கள் கூட்டணியைத் திட்டித் தீர்த்து, கூட்டணிக்குள் விரிசலேற்படட்டும் என்பதற்காகவே பிரதமரிடமிருந்து இந்தக் 'கருணை' பிறந்திருக்கிறது. இளைஞர் பேரவையினர் சிங்கள ஆட்சியின் இந்த உள்ளக்கிடக்கையை புரிந்துகொண்டு எச்சரிக்கையுடன் செயற்படவேண்டும்.

* * *

சூ. கிருபராஜா,
யாழ்ப்பாணம்.

கே; பிரிவினை முயற்சிக்கு இடமளியோம் என்கிருர் பிரேமதாசா. அதன் பிறகு எப்படித் தமிழீழம் கிடைக்கும்?

ப: ஆங்கிலேய ஏகாதிபத்தியமும், இந்தியாவின் சுதந்திரத்துக்கு இடமளியேன் என்றுதானே கூறியது— பின்னர் இந்தியா சுதந்திரமடையவில்லையா? ஏகாதிபத்திய வாதிகள் முதலில் இப்படித்தான் பேசுவார்கள்; விடுதலைத் தீ அணைக்கமுடியாதபடி பற்றிப் பிடித்ததும்—செத்த மாட்டிலிருந்து உண்ணி விலகுவதுபோல தாம் அடிமைப்படுத்தி வைத்திருந்த நாட்டைவிட்டு ஓடிவிடுவார்கள்!

கே: தமிழ் ஈழம் பெறுவதானல் போராடிப் பெறுவதா அல்லது அஹிம்சை வழியிற்பெறுவதா?

ப: அஹிம்சை வழி வெற்றியளிக்காத விடத்து எஞ்சியுள்ள வழி போராட்டம்தானே!

* * *

வ. ஸ்ரீகாந்தன்,
சுழிபுரம்.

கே: தமிழகத்தில் சிறிலங்காவின் ஜனதிபதியை தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். வரவேற்கக்கூடாதென்று கூறும் சுதந்திரன், பிரதமர் பிரேமதாசாவை கூட்டணி பா. உக்கள் சிலர் வரவேற்றதை ஏன்கண்டிக்கவில்லை?

ப: நீங்கள் ஒழுங்காகசுதந்திரன்படித்துவந்திருந்தால், இப்படியொரு கேள்வியை கேட்டிருக்கமாட்டீர்கள்!

* * *

க. மாணிக்கம்,
அச்சுவேலி வடக்கு.

கே: ஜே. ஆரின் ''கிழக்குமாகாண அபிவிருத்தி'' என்ற போர்வைக்குள் ஒழிந்து கிடப்பது என்ன?

ப: கிழக்குமாகாண பா. உக்கள் சிலரை தம்வசமாக்கும் 'போதை' மருந்தும், மதுருஓயா சிங்களக்குடியேற்றமும்!

கே: பச்சோந்திகள் நேரத்துக்குநேரம் தங்கள் நிறத்தை மாற்றிக்கொள்ளும் காரணம் என்ன?

ப: அவை முந்திய பிறப்பில் அரசியல் வாதிகளாக பிறந்திருக்கலாம்!

* * *

கே. பி. கிருஷ்ணமூர்த்தி,
விஞயகபுரம்,
திருக்கோவில்.

கே: புதிய அரசியல் சட்டத்தின் இரண்டாவது சரத்து ஒற்றையாட்சியைப்பிரகடனப்படுத்திய பின்னர் தமிழீழம் கிடைக்குமா?

ப; புதிய அரசியலமைப்பு சிங்களசிறீலங்காவுக்கே உரியது; சர்வதேச சட்டரீதியாக அச்சட்டம் தமிழ் ஈழத்தில் செல்லுபடியாகாது; தமிழீழப் பிரதிநிதிகள் தமது சம்மதத்தையோ இறைமையையோ புதிய அரசியலமைப்புக்கு வழங்கவில்லை; எனவே சிங்கள ஸ்ரீலங்கா ஒற்றையாட்சி நாடாக இருக்கலாம், ஆனல் தமிழீழத்தை அது எவ்வகையிலும் கட்டுப்படுத்த முடியாது!

* * *

சு. பாலகிருஷ்ணன்,
வத்தளை.

கே: காலதாமதமின்றி நம் தமிழீழ விடுதலை இயக்கத்தைப் பலவீனப்படுத்தும் துரோகிகளை தூக்கி வீசிவிட்டு உண்மையும் இலட்சிய விசுவாசமும் நிறைந்த தலைவர்களைச் சேர்த்து கூட்டணியை புனரமைப்பு செய்ய த. வி. கூ. தலைமை முன்வருமா;

ப: முன்வரவேண்டும்; முன்வரத்தவறினல் கூட்டணியிலும் தமிழ் மக்களுக்கு விரக்தியும், அவநம்பிக்கையும் ஏற்படும்; இப்படியொரு நிலை ஏற்பட்டால், தமிழ் சமுதாயம் தன்னம்பிக்கையையும் இழந்துவிடும்!

கே: இனத்தைக் காட்டிக்கொடுக்கும் கயவர்களை இறைவன் ஏன் படைக்கிருர்?

ப: உண்மையான வீரர்களின் புகழை நிலைநாட்டுவதற்காக!

* * *

ச.ராஜ்குமார், ச.நிரஞ்சன,
மானிப்பாய்.

கே: குயுக்தியாரே, தமிழர் விடுதலைக்கூட்டணியினர் தமிழ் மக்களை ஆசை காட்டி மோசம் செய்துவிடமாட்டார்களா?

ப: அப்படி மோசம் செய்தால், அவர்களை நாசம் செய்யும் சக்தியும் உங்கள் கரங்களில்தானே இருக்கிறது.

# முத்தமிழ்க் காவலருக்கு வைர விழா!



தமிழ் நாட்டின் பேரறிஞர்— முத்தமிழ்க் காவலர்— ஆன்றவிந்தடங்கிய சான்ருேர்— ஒழுக்கத்தை உயிரினும் ஓம்புவோர்— தூய தமிழை நாடெலாம் பரப்பும் தமிழ்த்தூதர்— திருக்குறளில் துறைபோகிய அறிஞர்— சித்த வைத்திய அறிஞர் — சிறந்த வணிகர் — சிறந்த சொற்பொழிவாளர் — சிறந்த எழுத்தாளர்— சிறந்த நூலாசிரியர்— சிறந்த அரசியல் சிந்தனையாளர் — சிறந்த இறைபக்தர்— இவ்வாறு பல்துறையிலும் தனக்கு ஒப்பாரும் மிக்காருமின்றி, மொழி, இனம், நாடு என்றுபணிபுரிந்து வரும் திருச்சிராப்பள்ளி, உயர்திரு. கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களின் 80ம் ஆண்டு வைர விழா திருச்சியில் 10-11-78 முதல் 30-11-78 வரை 21 நாட்களுக்கு 21 இடங்களில் கொண்டாடப்படுகிறது. இந் நிகழ்ச்சிகளில் தமிழக அரசியல் தலைவர்களும் புலவர் பெருமக்களும் கலந்து கொள்ளவிருக்கின்றனர்—

ஈழத்தமிழர்களின் நெருங்கிய நண்பரும், ஈழத்தமிழர் விடுதலையிலும், நலத்திலும், முன்னேற்றத்திலும் எப்போதும் அக்கறையும் ஆர்வமும் காட்டிவருபவருமான அறிஞர் விசுவநாதம் அவர்களின் வைர விழா வெற்றிகரமாக நடைபெற வாழ்த்துவதுடன், அவர் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து தமிழ்ப்பணிபுரியவேண்டுமென்றும் இதயம் நிறைய வாழ்த்துகிறேம்.

—ஆர்

## சுதந்திரன்
[வாரமிருமுறை]

## வெளிநாடுகள் — சந்தா விபரம்

( இலங்கை நாணயப்படி )

இந்தியா

| | | | |
|---|---|---|---|
| விமான மார்க்கம் | (ஓராண்டு) | ரூபா | 226.00 |
| ,, ,, | (அரையாண்டு) | ,, | 113.00 |
| கடல் மார்க்கம் | (ஓராண்டு) | ,, | 100.00 |
| ,, ,, | (அரையாண்டு) | ,, | 50.00 |

மலேசியா, சிங்கப்பூர், மத்தியகிழக்கு நாடுகள்

| | | | |
|---|---|---|---|
| விமான மார்க்கம் | (ஓராண்டு | ரூபா | 260.00 |
| ,, ,, | (அரையாண்டு) | ,, | 130.00 |
| கடல் மார்க்கம் | (ஓராண்டு) | ,, | 100.00 |
| ,, ,, | (அரையாண்டு) | ,, | 50.00 |

லண்டன், அவுஸ்திரேலியா

| | | | |
|---|---|---|---|
| விமான மார்க்கம் | (ஓராண்டு) | ,, | 320.00 |
| ,, ,, | (அரையாண்டு) | ,, | 160.00 |

அமெரிக்கா

| | | | |
|---|---|---|---|
| விமான மார்க்கம் | (ஓராண்டு) | ,, | 362.00 |
| ,, ,, | (அரையாண்டு | ,, | 181.00 |

அனுப்பவேண்டிய முகவரி:

நிர்வாகி சுதந்திரன்,
15, மகாத்மாகாந்தி வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை-

## தமிழர் விடுதலைக் கூட்டணி வாராந்தக் கருத்தரங்கு

காலம்:- 11-11-78 மாலை சனி 6—30 மணிக்கு.

தலைப்பு:- ''தமிழ் ஈழ விடுதலைக் கோரிக்கைக்கு உலகக் கவனத்தை ஈர்க்க தளபதி அமிர் மேற்கொண்டுவரும் உலகப் பயணம்.''

இந்தக் கருத்தரங்கில் ''தமிழ்த் தேசியமும் 1978-ம் வருட புதிய அரசமைப்புத்திட்டமும்'' என்ற, தலைப்பில் டாக்டர் ஏ. ஜே. வில்சன் ஆற்றிய உரை ஒலிபரப்பப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்கள்

# "பொம்மைகளாக" செயலின்றி இருப்பதா?

# அவர்கள் செயல் வீரர்களாக மாற வழியென்ன?

**சுதந்திரத்தின் பின் ஈழத்தமிழர்களின் அரசியல் சகாப்தத்தை இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம் 1972ம் ஆண்டுக்கு முற்பட்டகாலத்தை ஒரு பிரிவாகவும் 1972ம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலத்தை மறுபிரிவாகவும் பிரிக்கலாம். 1972 வரையான காலம் ஐக்கிய இலங்கையில் சம உரிமையுடன் தமிழினம் வாழ்வது 1972ம் ஆண்டுக்குப் பின் தமிழ் ஈழத்தில் பிரிந்து வாழ்வது 1972ம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்தில் தமிழ் மக்கள் தமதுரிமைகளுக்காக அவ்வப்போது பதவியில் இருந்த அரசுகளுடன் பேரம் பேசி தமதுரிமைகளை நிலைநாட்டமுற்பட்டனர். பிற்பட்ட காலம் தமிழ் ஈழ அரசை மீள்வித்துப் புனரமைப்பதென்ற முடிவினைச் செயல்படுத்தும் காலம்.**

ஆனால் இன்றைய அரசியல் சூழ்நிலை, அதாவது தமிழ் மக்கள் தமிழ் ஈழம் அமைப்பதென்ற முடிவைப் பிரகடனப்படுத்தி வெளிநாடுகளிலும் பிரசாரம் தொடங்கி விட்டமையால் இன்றைய அரசு தமிழ் ஈழ கோரிக்கைக்கு மாறாக, ஐக்கிய இலங்கையை தமிழ் மக்களும் ஏற்கவைக்க வேண்டுமென்பதற்காக -வெளிநாடுகளின் கண்களில் மண்ணைத் தூவுவதற்காக தமிழ் ஈழ பிரதிநிதிகளுடன் பேரம் பேச முற்படுகின்றனர். அதன்காரணமாகவே அரசாங்கத்துடன் சேருங்கள், ஒத்துழையுங்கள் என்ற கோரிக்கைகள் எழுப்பப்படுகின்றன.

## பேரம்பேசும் காலம் இல்லை

சில தமிழ் பிரமுகர்களும் 1972ம் ஆண்டுக்கு முற்பட்ட—பேரம் பேசிய அரசியல் காலகட்டங்களில் நடந்தது போன்று இப்பொழுதும் தமிழர் விடுதலைக் கூட்டணியை அரசுடன் சேருமாறு இலவச ஆலோசனை கூறிவருகின்றனர். ஆனால் இன்றேகாலம் கடந்து விட்டது. பேரம் பேசியகாலம் 1972ம் ஆண்டுடன் முடிந்து விட்டது. முன்பு ஆட்சி அமைக்க பெரும்பான்மை இன்மையால் சில சலுகைகளை வழங்குகின்றோம்எமக்கு ஆதரவளியுங்கள் என்று சிங்களக் கட்சிகள் கேட்டகாலம்; இன்றோ அதிகஅளவு பெரும்பான்மை பலம்இருந்தும், தமிழ் ஈழக் கோரிக்கையை அழிப்பதற்காக சலுகைகளும் சில உரிமைகளும் தருகின்றோம். வாருங்கள் எம்முடன் ஒன்று சேருங்கள் என்று பேரம் பேச முற்படும் காலம். என்னசெய்வோம் பேரம் பேசியகாலம் மலையேறிவிட்டதே. முன்பு சமஷ்டி கேட்டோம் மாவட்ட சபை முதலாய் தரவில்லை. இன்றோ சமஷ்டியும் வேண்டாம். தனிநாடொன்றே எமது இறுதி மூச்சு என்று மாறிவிட்ட காலம். பேரம் பேசுவதன் மூலம் தனிநாடு பெறமுடியாது. எனவே பேரம்பேசும் அரசியல் தமிழர்களிடையே இனி இல்லை. இனி தமிழ் ஈழ பிரகடனமும் போராட்டமுமேயாகும்.

## தெளிவற்றநிலை

இம்முடிவிற்கு வந்த ஈழத் தமிழினத்தின் மத்தியில் இன்று ஒரு தெளிவற்ற நிலை உருவாகியுள்ளது. ஈழத்தமிழரின் ஏக பிரதிநிதித்துவ ஸ்தாபனமான தமிழர் விடுதலைக் கூட்டணி—குறிப்பாக கூட்டணி பா. உக்கள் அண்மைக்காலமாக நடந்து கொள்ளும் முறையும்- வெளியிடும் கருத்துக்களும் தமிழ்மக்கள் மத்தியில் ஒரு தெளிவற்ற நிலையை உருவாக்கி வருகின்றது. இந்நிலை உருவாகுவதற்கு அடிப்படையாய் அமைந்துள்ள பாராளுமன்ற உறுப்பினர்களின் பல்வேறு கருத்துக்கள், தமிழீழத்தை பொருளாதார வழியில ஸ்திரப்படுத்துதல், தமிழ் ஈழத்தின் எல்லைப் பிரதேசத்தைக் காப்பாற்றுதல் என்ற துறைகளில் எழுப்பப்பட்டுவருகின்றன.

## இளைஞர் குமுறல்

கிழக்கு மாகாணம் பொருளாதாரத் துறையில் பின்தள்ளப் பட்டுள்ளதென்பது குரல். மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு போன்ற எல்லைப் பிரதேசங்கள் பறிபோகின்றது தென்பது மறுகுரல். இந்த இரண்டு காரியங்களையும் கருத்திற் கொண்டு செயல்படுவதாயின் அதற்கு தற்போதைய அரசின் மாவட்ட அமைச்சர் அமைப்புமுறை மிகவும் உதவியாய் இருக்குமென்பது தமிழர் விடுதலைக் கூட்டணி பா. உ. களில் அல்லது, தலைவர்களில் ஒரு சிலரது அபிப்பிராயமாகும். இந்த மாவட்ட அமைச்சர் பதவியை தமிழர் விடுதலைக் கூட்டணி பா. உக்கள் ஏற்கும் பட்சத்தில் தமிழ் ஈழத்தின் பொருளாதார நிலையும் எல்லைப் பாதுகாப்பும் தமிழருக்குச் சாதகமான முறையில் அமுல்நடத்தப்படலாம் என்று அவர்களால் கருதப்படுகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணி கடந்த தேர்தலில் கொடுத்த உறுதிமொழியின் பிரகாரம் தமிழ் ஈழத்தை அமைப்பதற்கான காரியங்களில் இன்னும் சிரத்தை இருந்துகவில்லையே என்று, பல இளம் உள்ளங்கள் குமுறத் தலைவர்கள் 1977 ஆவணி கலவரம் தமிழ் ஈழத்துக்கான போராட்டத்தைத் தாமதப்படுத்திவிட்டதென்றுகாரணம் கூறி சமாதானப்படுத்திவர, தற்போது மாவட்ட அமைச்சர் பதவியை ஏற்பதா என்ற கருத்தும் த. வி. கூட்டணி பா. உக்கள் மத்தியில் உருவாவதைக் காணும் அவ்விளம் உள்ளங்கள் குமுறும் எரிமலையாய் மாறுவதுஇயற்கையே.

## விசுவாசம்தேவை

இழந்த தமிழ் ஈழத்தை மீண்டும் நிலைநாட்ட முன்வந்துள்ள தமிழ் சமுதாயம் வெறும் உணர்ச்சிவசப்படாது மிகவும் கவனமாகவும் விவேகமாகவும் அதேவேளை விசுவாசத்துடனும் திர ஆராய்ந்து முடிவெடுப்பது மிக மிக அவசியமாகும், தேர்தலில் தமிழீழம்அமைப்போம் என்று வாக்குறுதி அளித்த தமிழர் விடுதலைக் கூட்டணி தற்சமயம் வாக்



பொம்மைகளா இருக்க வேண்டாம்; போராட்ட வீரர்களாக மாறுங்கள்.

குறுதியை நிறைவேற்ற சில மாற்றுவழிகளை இராஜதந்திர முறைப்படி கையாள வேண்டி ஏற்படின் நிச்சயம் அவ்வழிகளைக் கையாளவே வேண்டும். அதனை இனத்தைக் காட்டிக்கொடுத்த செயலென்று கூறுவதல்ல. இராஜதந்திரமென்றே கூற வேண்டும். இந்நிலையில் தமிழ் சமுதாயம் தம்தலைவர்கள் மீது பூரண விசுவாசம் கொள்ளவேண்டும்.

ஆனல், இன்றைய ஆட்சி தமிழ் சமுதாயத்தின் இறைமையையோ அல்லது தமிழ் சமுதாயம் சென்ற தேர்தலில் அளித்த தீர்ப்பையோ கவனத்திற் கொள்வதாய் இல்லை. திருவாளர்கள் எஸ். டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயக்கா, டட்லி சேனநாயக்கா போன்ற தலைவர்கள் ஏற்றுக் கொண்ட கொள்கையாகிய இலங்கையின் வட கிழ் மாகாணங்கள் தமிழர்களின் தாயகம்—'பாரம்பரியபிரதேசம் என்ற கொள்கையை முதலாய் ஏற்காதது மாத்திரமல்ல இது கால வரை தமிழ்— சிங்கள தலைவர்களுக்கிடையே ஏற்றுக் கொள்ளப்பட்ட சகல ஒப்பந்தங்களுக்கும் முரணாக தற்போதைய இலங்கைக் குடியரசின் ஜனாதிபதியவர்கள் வடக்கில் சிங்களவரையும் தெற்கில் தமிழரையும் குடியேற்றப் போவதாகக் கூறியுள்ளார். இக்கூற்று எவ்வளவு பாரதூரமானதொன்று என்பதை யாவரும் நன்கு உணர வேண்டும். இம் மாதிரியான ஒரு தலைவனின் சர்வஅதிகாரங்களின் கீழ்தான்மாவட்ட அமைச்சர் நியமிக்கப்படுவார். இக்கொள்கையின்கீழ் நியமனம் பெறும் ஒரு மாவட்ட அமைச்சர் பொருளாதாரத் துறையில் தமிழ் பகுதியை ஓரளவாவது வளம் படுத்தினலும் குடியேற்றம் என்ற விடயத்தில் தமிழ் மக்களுக்குச் சாதகமான எக்கருமத்தையும் செய்ய முடியுமென்று கூறுவதற்கில்லை. அதுவும் எல்லைப் பிரதேசத்தைப் பாதுகாப்பதற்காகவே த. வி. கூட்டணி பா. உக்கள் மாவட்ட அமைச்சர் பதவியை ஏற்கிருர்கள் என்பதை திரு. ஜே. ஆர். அவர்களின்அரசு அறிந்தால்மாவட்ட அமைச்சருக்கு எப்படியான அதிகாரங்கள் வழங்கப்படுமென்பதையும் உணரலாம்.

## குடியேற்றம்

திருகோணமலைத் தொகுதியை மட்டும் உதாரணத்துக்கு எடுத்துக்கொண்டால் 1952ம் ஆண்டு முதல், தமிழ்ப்பகுதியில் சிங்களக் குடியேற்றத்தை எதிர்க்கும் தமிழரசுக் கட்சியின் பிரதிநிதிகள் பா. உ. க்களாக இருந்திருக்கிறுர்கள். இருந்தும் அங்கு அத்துமீறிய சிங்கள குடியேற்றம் மிகவும் உற்சாகமாக வளர்ச்சியடைந்து வந்துள்ளது. பா. உ. க்களால் தடுத்து நிறுத்த முடிந்ததா? இல்லை! காரணம் அது சிங்கள அரசின் கீழ் சாத்தியமாகாத ஒன்று. இதனை எழுதுகின்ற இந்த வேளையிலும் திருகோணமலையில் அத்துமீறிய சிங்கள குடியேற்றம் நடைபெற்றுக் கொண்டேதான் இருக்கின்றது. இதுகால வரை திருகோணமலையில் கவனிப்பாரற்றுக் கிடந்த உயர்ந்த மலைகளிலும், வெள்ளம் தேங்கி நிற்கக் கூடிய குளக்கரைகளிலும், திருகோணமலை புகையிரத பாதை ஓரங்களிலும், குப்பை மேடுகளிலும் முதலாய் அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே போகின்றது. இதனை தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த ஒரு பாராளுமன்ற உறுப்பினர், திருகோணமலை மாவட்ட அமைச்சராய் இருந்தால்மட்டுமல்ல, மத்திய அரசின் காணி அமைச்சராய் இருந்தால் கூட தடுத்து நிறுத்த முடியாது. ஏனெனில் சர்வ அதிகாரங்களும் வடக்கில் சிங்களவரைக் குடியேற்றுவேன் என்றுகூறும் திரு. ஜே. ஆரின் கையில் இருப்பதேயாகும். மத்திய அரசின் அமைச்சராய் இருந்த காலம்சென்ற திரு. எம். திருச்செல்வத்திற்கேற்பட்ட கதியை இதற்கிடையில் தமிழினம் மறந்தா போயிருக்கும்! திருகோணமலை முற்றவெளியில் அத்துமீறிய சிங்கள கடைகளை அகற்ற முன்வந்த திருகோணமலை நகரசபை விசேட ஆணையாளர் திரு. வெற்றிவேலு அவர்கட்கு ஏற்பட்ட அனுபவங்களை திருகோணமலை தமிழ் மக்கள் நன்கு நினைவில் வைத்துள்ளார்கள். இந் நிலையில் மாவட்ட அமைச்சர் பதவி எந்த அளவிலும் எல்லைப் பிரதேசத்தைக் காப்பாற்ற உதவாது என்பது உறுதியானது.

## ஒரேவழி

திருகோணமலையில்லொறி சொந்தக்காரர், 'க்ராச்' உரிமையாளர்கள், அரிசி ஆலை நடத்துவோர், மீன், மரக்கறி, தேங்காய், கிடுகு வியாபாரம் அனைத்தும் சிங்களவர்களுக்கே உரித்தான தாயிற்று. திருகோணமலை நகர சுற்ருடல்எல்லாம் அத்துமீறிய சிங்களக் குடியேற்றம்; நகரத்திற்குட்பட்ட இடங்களில் பெருவாரியான பணத்தை அள்ளிக் கொடுத்து சொந்தக் காணியை விலைக்கு வாங்குகிருர்கள். பற்ருக்குறைக்கு இந்துக் கோவில்களுக்குச் சொந்தமான ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களும் சிங்களக் குடியேற்றத்துக்கே உதவியுள்ளன. ஏற்கனவே தூங்கி இருந்த தமிழர்கள் தற்போதுதான் விழித்துப் பார்த்தார்கள்; எல்லாம் பறிபோய் விட்டன! இந்த நிலையில் திருகோணமலை போன்ற எல்லைப் பிரதேசத்தைக் காப்பாற்றுவதற்கு என்ன வழி?

**இரா. பொன்னுத்துரை**
(திருகோணமலை)

**ஆம்! உள்ள வழி ஒன்று தான், அது தமிழ் ஈழ பிரகடனமும் போராட்டமும் தான். தமிழ் ஈழப்போர் தொடங்கி விட்டால் அதுவும் ஜீவ மரண போராட்டம் தொடங்கி விட்டால் அச்சூழ்நிலையில் அத்துமீறிச் சிங்களக் குடியேற்றங்கள் தடைபடும். இதை விட வேறு எந்தச் சட்டமூலமும்— சிங்கள அரசுகள் கொண்டு வரும் எச்சட்டங்களும் சிங்களக்குடியேற்றத்தைக் கட்டுப்படுத்தாது, இது சர்வ நிச்சயம்.**

## இயக்கம் அழிவதா?

அடுத்து தமிழ் பகுதியின் பொருளாதார நிலையைச் சற்று உயர்த்துவதற்கு மாவட்ட அமைச்சர் பதவி பயன்படும் என்ருல் அதில் ஓரளவு உண்மை இருக்கலாம். அதே வேளை பொருளாதார நிலையை உயர்த்துவதற்காக இத்தனை ஆண்டு காலமாக கண்ணீரும் செந்நீரும் சிந்தி வளர்த்த ஒரு விடுதலை இயக்கத்தைச் சீர்குலைய விட்டுவிட்டு பொருளாதார உயர்ச்சியை நோக்கி சென்று சிங்கள ஆட்சியுடன் ஒன்றிணையலாமா? நம் ஈழத் தமிழினத்தின் விடுதலைக்காக வெளிநாடுகளில முதலாய் தமிழ் இளைஞர்களும், உயர்திரு. வைகுந்தவாசன்

—6-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.நாவுக்குள் வைகுந்த—

—1-ம் பக்கத் தொடர்

பிரதிநிதிகளைத் தவிர-ஏதோ பிழை நடந்துவிட்டதெனச் சந்தேகிக்கவில்லை.

மேடையில், இன்டேல்சியோ லிவியானே என்ற பெயருடைய கொலம்பியாவைச் சேர்ந்த முதியவரான பொதுச்சபைத் தலைவரால் வாழ்த்தப்பட்ட வைகுந்தவாசன் ஒரு முறை தலை குனிந்து சம்பிரதாய பூர்வமாகப் பதில் மரியாதையை தெரிவித்துக் கொண்டார்.

### உரையாற்றினர்

''தலைவர் அவர்களே, உலகத் தலைவர்களே...''—அவர் தொடங்கினர். ''உலகத் தலைவர்களே'' என்று அவர் அழைத்தது சற்று அசாதாரணமாகக் காணப்பட்டது. பொதுவாக, பொதுச்சபையில் உரையாற்றத் தொடங்குகிறவர்கள், சபைத்தலைவருக்குப் புகழ்மாலை சூடுவதுடன், தனது நாட்டையும் தன்னையும் ஜனநாயக தர்மங்களின் சின்னமாக உருவகித்தே பேச ஆரம்பிப்பார்கள்.

ஆயினும், அசாதாரணமான இந்த ஆரம்பம் பற்றி யாரும் அலட்டிக்கொள்ளவில்லை. சிறீலங்காவின் வெளிநாட்டு அமைச்சர் அசாதாரணமான எதையாவது உண்டாக்குவார் என்று சந்தேகப்பட எதுவித காரணமும் இருக்கவில்லையே!

''தமிழ் ஈழம் போன்ற அடக்கியொடுக்கப்பட்டுள்ள சிறிய தேசங்கள், உலகின் ஆக உயர்ந்த மன்றமான இச்சபையில் தமது முறையீடுகளை வைக்க முடியாதென்றால், நாங்கள் எங்கேதான்போவது? தயவு செய்து ஒரேயொரு நிமிடம் என்னைப் பேசுவதற்கு அனுமதியுங்கள்.''—வைகுந்தவாசன் தொடர்ந்தார்.

தமிழ்ஈழமா? எப்போது அந்த நாடு ஐக்கியநாடுகள் சபையில் உறுப்புரிமைபெற்றது? சபைத்தலைவருடைய முகம், ஏதோ விசித்திரம் நடந்திருக்கிறதுபோல உடனடியாக மாறுபட்டது; பேராளர் மத்தியிலிருந்து முணுமுணுப்புக்கள் பரவியது.

''எனது பெயர் கிருஷ்ணா. சிறீலங்காவுக்கும் இந்தியாவுக்குமிடையே இருக்கும் 25 இலட்சம் மக்களைக் கொண்ட பலம் பொருந்திய தமிழ் ஈழத்திலிருந்து வந்திருக்கிறேன். சிறீலங்கா அரசாங்கம் தனது இனக்கொலைக் கொள்கையை தொடருகிறது...''

இக்கட்டத்தில், பதற்றமடைந்த ஓர் அதிகாரி ஒலிபெருக்கியை நிறுத்துகிறார். இவர்தான் சிறீலங்காவின் வெளியுறவு அமைச்சராக இருக்குமானால், இவருக்கு மூளை குழம்பிப்போயிருக்க வேண்டும்.

ஆயினும், தூரத்தில் மண்டப மூலைகளில்நின்றிருந்த பாதுகாப்பு அதிகாரிகள் மேடையை நோக்கிப் பாய்ந்து சென்ற நேரத்திலும், வைகுந்தவாசன் தொடர்ந்து பேசுகிறார்—

''நாங்கள், ஒரு தனிநாடாக வாழ்வதற்கு எங்களுக்குள்ள சுயநிர்ணய உரிமையை பயன்படுத்திவிட்டோம். இந்தியப் பிராந்தியத்தின் சமாதானத்துக்கு தமிழ்ப்பிரச்சினை ஒரு ஆபத்தான பயமுறுத்தலாகவே இருந்துவருகிறது. உலகத்தலைவர்களாகிய நீங்கள் இப்போதே இதில் தலையிட்டு ஒரு தீர்வு ஏற்பட உதவினாலன்றி, பாலஸ்தீனப் பிரச்சினை சைப்பிரஸ் பிரச்சினை போன்று இலங்கைப் பிரச்சினையும் எதிர்காலத்தில் மிக மோசமான வடிவம் எடுக்கும்.''

இக்கட்டத்தில் பாதுகாப்பு அதிகாரிகள்வைகுந்தவாசனை பலவந்தமாக வெளியே தள்ளிச்சென்றார்கள். சங்கடத்துக்குள்ளான அவை அலுவலர்கள், சிறீலங்காவின் உண்மையான வெளிநாட்டு அமைச்சர் சாகுல்ஹமீத்தை அழைத்து வருகிறார்கள்.

ஐ.நாவுக்கு திரும்பிவர வேண்டாமென்று கூறி வைகுந்தவாசனை விடுதலை செய்தனர்.

சிறீலங்கா வெளிநாட்டு அமைச்சராக தாம் ஆள்மாறாட்டம் செய்ததுபற்றி பின்னர் விபரித்த வைகுந்தவாசன், இதை எவ்வாறு திட்டமிட்டார் என்பதை எடுத்துரைத்தார்.

ஆகஸ்டில் நியூயார்க்கில் நடைபெற்ற அமெரிக்க

—5-ம் பக்கம் பார்க்க

# பூனை கண்ணை மூடிக்கொண்டால் உலகமே இருண்டு விடுமா?

**பூனை** தனது கண்களை மூடிக்கொண்டால், உலகமே இருண்டு விட்டதென்று நினைக்குமாம். அதே போல உலக நாடுகளுக்கு இலங்கையில் நடப்பது எதுவுமே தெரியாதென்ற நினைப்பில் — சிறீலங்காவின் ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன சென்னையில் பத்திரிகை நிருபர்களுக்கு பேட்டியளித்தபோது, ''இலங்கையில் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினை'' என்று ஒன்று இப்போது கிடையாது என்று கூறியிருக்கிறார்— அதாவது உருத்திராட்சப் பூனை வேடம் போட்டிருக்கிறார்!

## எண்ணம்

இப்படித்தான் 1956ம் ஆண்டு முதல் ஆட்சிக்கு வரும் ஒவ்வொரு சிங்களக் கட்சியின் தலைவரும் கூறி வந்திருக்கிறார்கள். தமிழ் மக்களின் பிரச்சினை தீர்ந்து போன பிரச்சினையென்பார்கள்; பின்னர் தமிழர்களின் போராட்டம் தீவிரமடைந்ததும், பணிந்துவந்து பேச்சு வார்த்தை நடத்தி உடன்படிக்கையெழுதுவார்கள்; பின்னர் அவற்றை கிழித்தெறிவார்கள் — இதுதான் இலங்கையின் கடந்த கால வரலாறு!

முந்திய சிங்கள ஆட்சியின்போதும், முந்திய பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயகாவும், அவரது அமைச்சர்களும் கூட இப்படித்தான் கூறிவந்தார்கள்; தமிழர் பிரச்சினையென்று எதுவும் கிடையாதென்று கூறி வந்தார்கள்; தமது ஆட்சியின் இறுதிக்காலக் கட்டத்தில்—பொதுத் தேர்தல் வரவிருந்த சமயத்தில்—தீர்ந்து போன பிரச்சினைகள் என்று அவர்களே கூறிவந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காண தமிழர் விடுதலைக் கூட்டணியை அழைத்துப் பேசினார்கள்.

திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவும், அவரது ஐ.தே. கட்சியினரும் தமிழர்களின் ஆதரவைத் தமக்கு தேடிக் கொள்ளும் நோக்குடன் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில், தமிழர் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணப்படவில்லையென்பதை பகிரங்கமாக ஒப்புக்கொண்டு, இதனால் தனிநாடு கோரிக்கையை ஆதரிக்கும் நிலைக்கு தமிழர்கள் தள்ளப்பட்டு விட்டார்கள் என்றும், தமது கட்சி ஆட்சிக்கு வரும்பட்சத்தில், ஒருசர்வகட்சி மாநாட்டைக் கூட்டி தமிழர் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணப்படும் என்று திட்டவட்டமாகக் கூறியிருந்தனர்.

ஐ. தே. கட்சி ஆட்சி வந்தது; ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் சர்வாதிகார ஜனதிபதியாகி விட்டார்; ஐ. தே. கட்சி ஆட்சியேற்பட்டதும். கூடவே தமிழர்களுக்கெதிரான கொள்ளி வைப்பும் வந்தது, ஆம், 1977 ஆகஸ்ட் இனக்கலவரத்தையே குறிப்பிடுகிறோம்.

ஐ. தே. கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டுள்ளபடி இதுவரை சர்வகட்சி மாநாடு கூட்டப்படவுமில்லை— தமிழர் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படவுமில்லை; மாறாக சர்வகட்சிகளையும் அழித்தொழிக்கும் சர்வாதிகார நடவடிக்கையிலேயே அரசாங்கம் கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறது,

இந்நிலையில்தான் சென்னையில் நின்று அங்குள்ள நாலரைக்கோடி தமிழ் மக்களையும் அரசியல் தலைவர்களையும் படு முட்டாள்கள் என்று கருதிக்கொண்டு— 'இலங்கையில் தமிழர் பிரச்சினையென்று இப்போது எதுவும் கிடையாதென்றும், கிழக்கு மாகாணத்தில் ஐ. தே. கட்சியே அதிக இடங்களைக் கைப்பற்றியுள்ளதென்றும், கிழக்கு மாகாணத்திலுள்ள கூட்டணி பா. உக்கள் சிலரும் அரசுடன் சேர விருப்பம் தெரிவித்திருப்பதாகவும். தாம் இலங்கை சென்றதும் இது சம்பந்தமாக மேற்கொண்டு நடவடிக்கையெடுக்கப் போவதாகவும்'' ஜனதிபதி ஜே. ஆர் சென்னையில் தெரிவித்துள்ளதாக இலங்கை வானொலி செய்தி தெரிவிக்கிறது.

கிழக்கு மாகாணத்தில் 2 சிங்களப் பிரதிநிதிகளுக்கும், 5 முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும், 5 தமிழ் பிரதிநிதிகளுக்கும் இடமுண்டு. இவற்றில் கடந்த பொதுத்தேர்தலின்போது 2சிங்கள பிரதிநிதிகளும், 5முஸ்லிம் பிரதிநிதிகளும் ஐ.தே. கட்சி சார்பில் வெற்றி பெற்றார்கள் என்பது உண்மைதான்!

ஆனால் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தை எடுத்துக் கொண்டால்— அவர்களுக்கு கிழக்கில்ஐந்தே ஐந்து தொகுதிகளே உண்டு; இந்தஐந்து தமிழ்த்தொகுதிகளில் கூட்டணி 4 தொகுதிகளில் வெற்றி பெற்றது. ஒரேயொரு தொகுதியில்—அதாவது கல்குடாத் தொகுதியில் மட்டுமே ஐ. தே. கட்சியின்இன்றைய தமிழ் அமைச்சரான திரு. தேவநாயகம்—மயிரிழையில் ஆக 505 பெரும்பான்மை வாக்குகளால் — வெற்றி பெற்றார். இது புள்ளி விபரம் கூறும் மறுக்கொணு உண்மை;

அதே சமயம் கட்சிகளுக்கு கிடைத்த வாக்குகளின் அடிப்படையில் பார்க்கும் போது கூட— சேருவில, அம்பாறை ஆகிய இரு சிங்களத் தொகுதிகளைத் தவிர்த்து —கிழக்கு மாகாணத்தின் ஏனைய எட்டுத்தொகுதிகளிலும் ஐ. தே. கட்சியை விட தமிழர் விடுதலைக் கூட்டணியே அதிகமான வாக்குகளை பெற்றிருக்கிறது. ஆம் கிழக்கு மாகாணத்தில் த. வி. கூ. பெற்ற மொத்த வாக்குகள், 1, 39, 925, அதே சமயம் ஐ.தே. கட்சி பெற்ற மொத்த வாக்குகள் 1, 24, 621, எனவே ஐ. தே.க. யை விட, கூட்டணி 15, 304 மேலதிக வாக்குகளை பெற்றுள்ளது.

புள்ளிவிபரங்கள் இப்படிப்பேசும்போது, கிழக்கு மாகாணத் தமிழ் மக்கள் அரசாங்கத்தை ஆதரிப்பதாக கூறி உலகின் கண்களில் மண்ணைத்தூவ முயற்சிக்கிறார் அதி உத்தமர்ஜே.ஆர். கிழக்குமாகாணம் அரசாங்கத்தை ஆதரிப்பது உண்மையானால் — கிழக்குமாகாணத்தின் இளம் அரசியல் தலைவர்களான தங்கத்துரை, காசிஆனந்தன், உட்பட ஏராளமான கிழக்குமாகாண இளைஞர்கள் — மாவட்ட அமைச்சர் கனகரத்தினத்தின் மகன் உட்பட— எதற்காக கொடிய சிறைச்சாலைகளில் மாதக்கணக்காககிடந்து உழல்கிறார்கள்!

ஒரு சில பலவீனமான பா.உ.க்களை பதவி, சலுகைகள் என்ற ஆசை காட்டி அரசாங்கத்துக்கு இழுத்து அவர்களை தமது கைப்பொம்மைகளாக உலகுக்குக்காட்டி,தமிழர் தம்மை ஆதரிக்கிறார்கள் என்று பிரசாரம் செய்வது டி. எஸ். காலம் முதல் இன்றுவரை, சிங்கள ஏகாதிபத்தியம் கடைப்பிடித்து வரும் ஒரு நரித்தந்திரமாகும். இதனால் தமிழர் பிரச்சினையை ஒரு போதும் தீர்த்து விட முடியாதென்பதை ஜே. ஆரும் உணரும் காலம் வெகு தூரத்தில் இல்லை.

தமிழர் பிரச்சினைக்குத் 'தீர்வுகாண்பது' என்பது தான் என்ன?

சில மொழிச்சலுகைகளையோ, கல்விச்சலுகைகளையோ. அரசியலமைப்பில் சேர்ப்பதும், சில அரசாங்க நிறுவனங்களுக்கு இயக்குனர்களாக ஒரு சில தமிழர்களை நியமிப்பதும் தான். தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு என்று அரசாங்கம் கருதுமானால், அது தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்ளுகிறது என்பதுதான் அர்த்தம்.

இலங்கையில் தமிழர் பிரச்சினையென்பது—இன்று இரண்டு நாடுகளின், இரண்டு தேசிய இனங்களின் பிரச்சினையாகும்!

தமிழ் தேசிய இனத்தின் பிரதேச எல்லைகள்—தமிழ் ஈழநாட்டெல்லைகள்—சம்பந்தப்பட்ட பிரச்சினையாகும்!

தமிழ்த்தேசிய இனத்தின் இறைமை, சுயநிர்ணய உரிமை ஆகியவற்றின் அடிப்படையில் தீர்வுகாணப்பட வேண்டிய பிரச்சினையாகும்!

இன்று சட்டவிரோதமாகவும் பலவந்தமாகவும் தமிழ் ஈழத்தை ஆக்கிரமித்துக்கொண்டு, தனது படைபலத்தைக் கொண்டு தமிழ் ஈழத்தை ஆட்சி புரிந்து வரும் சிங்கள சிறீலங்கா, தமிழ் ஈழத்தை விட்டு எப்போது வெளியேறுகிறதோ அப்போதே தமிழர்பிரச்சினைக்கு. நிரந்தரமான தீர்வு ஏற்படும்!

இதை சமாதான வழிகளில் அடைவதாஅல்லதுயுத்த முனையில்தான் அடையவேண்டுமா என்பதை காலம் தான் தீர்மானிக்க வேண்டும்!

இதற்கிடையே, தலையை மண்ணிலே புதைத்துக் கொள்ளும் நிக்கோழிபோல, உண்மையான பிரச்சினையை தரிசிக்க மறுத்து தமிழர் பிரச்சினையே 'கிடையாது என்று கூறுவதன்மூலம், திரு. ஜே.ஆர். ஜெயவர்த்தன அவர்களால் உலகின் கண்களில் மண்ணைத்தூவி விடமுடியாதென்பது நிச்சயம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமிருக்கு சந்தர்ப்பம் எடுத்துக்கொடுக்க முயற்சி!

—4-ம் பக்கத் தொடர்

வழக்கறிஞர்கள் சங்க வருடாந்த மாநாட்டில் கலந்து கொள்ள வந்திருந்த வைகுந்தவாசன், ஐ. நா. சபையின் துணை செயலாளராக இருந்து இப்போது ஒய்வுபெற்றுள்ள திரு. சி. வி. நரசிம்மனை முதன் முதலாகச் சந்தித்து, அமெரிக்க இராசாங்க அமைச்சின் அழைப்பின்பேரில் அமெரிக்காவுக்கு வருகை தரும் இலங்கைத் தமிழ்த் தலைவர் அப்பாபிள்ளை அமிர்தலிங்கம் அவர்கள் ஐ. நா. பொதுச்சபையில் தனது மக்களின் சார்பில் பேசுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்த முடியுமா என்பது பற்றி பேசினுர். அதிகாரபூர்வமற்றமுறையில் தனதுஇடையிலே துப்பாக்கியையும் வைத்துக்கொண்டு பாலஸ்தினியத்தலைவர் யசிர் அரபாத் ஐ. நா. சபையில் உரையாற்ற முடியுமென்ருல்,— ஏன் அமிர்தலிங்கம் மட்டும் உரையாற்றமுடியாது?

ஆனல், இந்தியத் தமிழரான திரு. நரசிம்மனுல், எதுவித ஊக்கத்தையும் வைகுந்தவாசனுக்குக்கொடுக்கமுடியவில்லை. அரபாத்துக்கு அரபு உலகம் முழுவதும் ஆதரவு அளித்தது; அதையொத்த அளவு ஆதரவினைத்திரட்ட திரு. அமிர்தலிங்கத்தால் முடியுமென்ருல், அப்போது அவருக்கும் அந்த வாய்ப்பு கிடைக்கும்.

## சுயமானதிட்டம்

சாம்பியாவின் முன்னுள் மாவட்ட நீதிபதியான வைகுந்தவாசன், "ஏன் நானுக ஏதும் செய்யக்கூடாது?" என்று எண்ணத் தலைப்பட்டார். பல கிழமைகளாக, அனுபவப்பட்ட ஒரு வங்கிக்கொள்ளையன் போல— அவ்விடத்தை (ஐ. நா. சபையை) நன்ருக ஆராய்ந்து நோட்டம் விட்டார்.

செப்டம்பர் மாதம் முழுவதும், ஐ. நா. சபைச்செயலகத்துக்கு அதன் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளையும் விட, ஒழுங்காகச் சென்று வந்நார்.

ஈஸ்ட் றிவர் பக்கத்திலிருக்கும் கண்ணுடி உயர் மாடிவழியாக, பார்வையாளர் நுழைவாயிலினூடாக காவலாளிகளுடன் வந்தாலொழிய, செயலகத்தின் பிரதான வாசலூடாக உள்ளே நுழைவது சாதாரணமாக கஷ்டமான காரியமே,

ஆனல், பொதுச்சபைக் கூட்டத்தொடர் ஆரம்பமானபின்னர், எல்லாவகையான நிறத்தவரும் மொழியினரும், கொள்கையுடைய வருமான பிரதிநிதிகள்— அவர்களின் உடைகளின் வகைகளைக் கூறவேண்டியதில்லை— அக்கட்டடத்தின் உள்ளும் புறமும் விரைந்து திரிவார்கள். அச்சமயத்தில், பாதுகாப்பு அதிகாரிகள், அடையாளப் பத்திரங்களைப் பார்வையிட்டு, அதிகம் 'பிகு' பண்ணுவதில்லை.

மிக அண்மையில்தான், அடையாளப் பத்திரமின்றி கசங்கிய குர்தாவும் பிஜாமாவும் அணிந்து வந்திருந்த இந்தியப் பிரதிநிதியொருவர் கமிட்டி அறையொன்றுக்குள் செல்லவிடாது தடுக்கப்பட்ட நிகழ்ச்சி நடைபெற்றது. அவருடன் கூட வந்த இந்தியப்பத்திரிகையாளர் ஒருவர் பாதுகாப்பு அதிகாரியிடம், குறித்த நபர் ஓர் முக்கியமான ஆள் என்றும்,அவரைஉள்ளேவிட மறுப்பதன் மூலம், அவர் (பாதுகாப்பு அதிகாரி) எதுவித நன்மையும் அடையப் போவதில்லையென்றும் சுட்டிக் காட்டி வாதாடியதன் பின்பே, உள்ளே அந்த நபர் அனுமதிக்கப்பட்டார்—

ஆகவே பல ஆண்டுகளாக நீதிபதி ஸ்தானத்திலிருந்து பல வகையான குற்றவாளிகளுடனும் ஊடாடியதால் தாம் பெற்றிருந்த மனேதத்துவ உள்ளுணர்வுடன், ஐ. நா. சபைக்குள் நுழைவதற்கு வைகுந்தவாசன் ஓர் அருமையான திட்டத்தைத் தீட்டினுர். அத்திட்டம்தான் என்ன? ஒன்றும் பிரமாதப்படுத்தாது சாதாரணமாக உள்ளே நடந்து செல்வதே அத்திட்டம். அப்படியே உள்ளே நுழைந்தார்.

## ஒவ்வோர்நாளும்..!

ஒவ்வோர் நாளும் தனது கைப்பொடியுடன் வேர்க்க விறுவிறுக்க அவசரமாக பாதுகாவலர்களை கடந்து உள்ளே சென்ருர். அதி முக்கியமான கமிட்டிக் கூட்டம் ஒன்றுக்கு தாம் பிந்தி விட்ட ஒருவித பரபரப்பு அவரது முகத்தில் காணப்படும். இதை உறுதிப்படுத்துவது போல வாசலை நெருங்கிய நேரத்தில், தமது கைக்கடிகாரத்தை எடுத்து ஏதோ நேரம் பிந்தி விட்டதோ என்று கவலைப்படும்பாவனையுடன் அடிக்கடி பார்த்துக் கொள்வார்.

"ஒருபோதும் நான் தடுக்கப் படவேயில்லை— ஒரு தடவை கூடக் கிடையாது" —தனதுசாதனையையொட்டி முகத்தில்பெருமை தொனிக்கும் ஒரு வகையான கள்ளச் சிரிப்புடன் வைகுந்தவாசன் இவ்வாறுகூறினுர். "இதற்கு உருக்கினுலான நரம்புகள் தேவை" என்றுஅவர் ஒப்புக் கொண்டார்.

## வால்டெய்ம் அறிமுகம்

மிக விரைவில், நுழைவாயிலில் இருந்த பாதுகாப்பு அதிகாரிகளுக்கு மட்டுமன்றி, அவர் உள்ளேசுற்றித்திரிந்த பல்வேறு மாடிகளிலுமுள்ளவர்களுக்கும் அவரது முகம் பழக்கமானதாகி விட்டது. எப்போதும் மிகவும் சுறுசுறுப்பாகவும் சுமையான வேலையுள்ளவர் போலவும் தம்மை வைத்துக் கொண்டார் அவர். உலகடங்கிலுமிருந்து வந்திருந்த பேராளர்களுடன், முதலில் செயலகத்திலிருந்த சிற்றுண்டிச் சாலையிலும், பின்னர் இராசதந்திரிகளின் சந்திப்புக்களின் போதும் மிகவும்நெருக்கமாகப் பழகினுர். ஒரு பார்ட்டியின்போது, ஐ.நா. பொதுச்செயலாளர் குவாட் வால்டெய்ம் அவர்களுக்குக் கூட வைகுந்தவாசன் அறிமுகப்படுத்தப்பட்டார்.

நான் சிறீலங்காவைச் சேர்ந்தவன்" என்று அவர் உண்மையையே கூறினுர். எந்தக் குழுவில் அவர் பணியாற்றுகிருர் என்று கேட்கப்பட்டபோது (ஐ.நா. சபையில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு குழுவிலேயே பணியாற்றுகிருர்கள்.) உண்மைக்குச் சற்று மெருகூட்டி, "நான் இரண்டாவது குழுவில் இடம்பெறுவதா அல்லது மூன்ருவது குழுவில் இடம்பெறுவதா என்பதை இன்னும் தீர்மானிக்கவில்லை" என்று கூறுவார்.

## தமிழ் ஈழப் பிரதிநிதி

நாள்தோறும் நடைபெறும் பொதுச்சபைக் கூட்டத்தின் போது வைகுந்தவாசன் பேராளர் பகுதியிலேயே கூட உட்கார்ந்திருக்கிருர். "நானும் ஒரு பேராளர் தான்; தமிழ் ஈழத்திலிருந்து வந்த பேராளர் நான்— என்று என் மனதுக்குள் நானே கூறிக்கொள்வேன்" என்று அவர் தெரிவித்தார். சிறீலங்காவின் தமிழ் மரபுவழிப் பிரதேசமான வடக்கு கிழக்கு மாநிலத்தில் அவர் உருவாக்க விரும்பும் தமிழ் இராச்சியத்தின் பெயரே தமிழ் ஈழமாகும்.

## இந்தியப் பிரதிநிதிகள் உதவினர்

ஐ. நா. சபையில் வைகுந்தவாசன் "தற்காலிக வாசம்" செய்த போது, அவர் நட்புக் கொண்டிருந்த சில இந்தியப் பிரதிநிதிகளிடமிருந்து கிடைத்த ஓரளவு உதவியுடனேயே அவர் பேராளர் பகுதிக்கு அனுமதி பெற்றதாக இந்தியப் பிரதிநிதிகளுடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன. ஆயினும், அவர் இதை உறுதிப்படுத்தவில்லை. அவர் எதற்காகத் திட்டமிடுகிருர் என்பதை அவர்கள் ஒருவேளை அறியாமலுமிருந்திருக்கலாம்.

## பிரச்சினை

இலங்கையிலுள்ள இந்துக்களான தமிழர்களுக்கு— 110 இலட்சம் பௌத்த சிங்களவர்களுக்கு இருப்பது போலவே 2500 வருட வரலாறு உண்டு. இந்த இரண்டு இனங்களும், 1948ம் ஆண்டு காலனித்துவ பிரிட்டிஷ் ஆட்சி வெளியேறிய போது, இலங்கையென்ற ஒரே நாட்டுக்குள் பிணைக்கப்பட்டார்கள்.

அன்றிலிருந்து அவர்கள் அமைதியாகவாழவேயில்லை!

கடந்த ஆகஸ்டில்தான் தீவு முழுவதும் இடம்பெற்ற இனக்கலவரத்தின் போது 200 பேர்— அவர்களில் பெரும்பாலும் தமிழர்கள்— கொல்லப்பட்டார்கள். தீவிலுள்ள தமிழ் இளைஞர்களைப் பொறுத்தவரை பிரச்சினை வெடிப்பதற்கான கடைசிக் காரணி அதுவாகும்.

## தனிநாடு

சிங்கள பிரதேசங்களுடன் சமஷ்டி அடிப்படையிலான சில உறவுகளைமட்டும் வைத்துக் கொள்ளக் கூடிய ஒரு தனித்தமிழ் அரசுக்காகத் தன் வாழ் நாள் முழுவதும் இது வரை போராடி வந்த திரு. அமிர்தலிங்கம் போன்றவர்களால், பூரண சுதந்திரமே வேண்டும் என்ற தமிழ்இளைஞர்களின்பேரார்வத்துக்கு தடை போட முடியவில்லை. அமிர்தலிங்கம் வன்முறைக்கு ஊக்கமளிக்காது, சமாதான வழியில் தமது மக்களின் சுதந்திரத்தை ஈட்டிக் கொள்ள முடியும் என்று நம்பிக்கை தெரிவித்தாலும் கூட— வன்முறைகள் அங்கு தலை தூக்கியேயுள்ளன; ஆனல் காலம் ஓடிக்கொண்டேயிருக்கிறது.

தாம் என்ன செய்யத் திட்டமிடுகிருேம் என்பது குறித்து வைகுந்தவாசனின் மனதில் எவ்விதகலக்கமோ, மயக்கமோ இருந்ததில்லை— தனது மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய அவர், தமது மக்களின் வழக்கை உலக நாடுகளின் முன்னிலையில் எடுத்துரைப்பதற்கு முறையான வாய்ப்புத்தரப்படாதவிடத்து எவ்வகையாகவேனும் அதை முன்வைக்க உறுதி பூண்டிருந்தார்.

## அக்டோபர்-5

அக்டோபர் 5ம் திகதி— சிறீலங்காவின் வெளிநாட்டமைச்சர் பேசுவதற்கு —நிகழ்ச்சி நிரலில் நேரம் ஒதுக்கப்பட்டிருந்த அன்று, வைகுந்தவாசன் ஒவ்வொரு தூதுக்குழுவிடமும் மாறி மாறி சென்று சிறு உரையாடலில் ஈடுபட்டிருந்தார்: ஆயினும் அவரது சபைத் தலைவரின் அழைப்பையே எதிர்நோக்கிக் கொண்டிருந்தது.

இறுதியாக அந்த குறிப்பிட்ட நேரம் வந்தபோது அவர் கெம்பீரமாக மேடையை நோக்கி நடந்தாராயினும் வழக்கத்திற்கு மாருன பதட்டமெதுவும் அவரிடம் காணப்படவில்லை. அதிகாரிகளுக்கு தலை வணங்கிய அவர், சிறீலங்காவின் உண்மையான வெளிநாட்டமைச்சர் தனது கதிரையை விட்டெழுவதற்கு முன்பே, தாம் சொல்ல வேண்டியதைச் சொல்லி முடித்துவிட்டார்.

# அருமைநாதருக்கு எமது அஞ்சலி!

தமிழர் விடுதலை இயக்கத்தின் பழம் பெரும் தொண்டர்களிலொருவரும் பிரபல சமூக சேவையாளரும் நாரந்தனைக் கிராம சபையின் முன்னுள் தலைவருமான திரு. சவரிமுத்து அருமைநாதர் 6.11.78 திங்கட்கிழமை காலமானுர். தமிழரசுக் கட்சியின் ஆரம்பகாலத் தொண்டர்களில் ஒருவரான இவர், ஊர்காவற்துறை தொகுதி தமிழரசுக்கட்சிக்கிளையின் தலைவராகப் பணியாற்றியவர். வேலணை, நாரந்தனை, கிராமசபைகளில் 32 வருடங்களாக உறுப்பினராகவும் தலைவராகவும் விளங்கி மக்கள் பணியாற்றியவர். தீவுப்பகுதி தந்த மிகச் சிறந்த அரசியல், சமுதாயத்தொண்டராக விளங்கியவர்.

1957ம் ஆண்டு சிங்கள சிறீ எதிர்ப்பு போராட்டம் உட்பட தமிழரசுக்கட்சி நடத்திய அத்தனை உரிமைப் போராட்டங்களிலும் முன்னணி வகித்த கொள்கை வீரரான திரு. அருமைநாதரின் பிரிவுவிடுதலை இயக்கத்துக்கும், தமிழ் சமுதாயத்துக்கும் தீவுப் பகுதிக்கும் மிகப்பெரிய பேரிழப்பாகும்.

அருமைநாதரின் பிரிவால் துயருறும் அனைவர்க்கும் சுதந்திரன் தனது ஆழ்ந்த அநுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

# ஆறுமாத விளக்க மறியலின் பின்னர் தங்கத்துரை பிணையில் விடுதலை!

மூதூர் முன்னுள் பா. உ. வும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் இளந்தலைவர்களில் ஒருவரும், கூட்டணியின் தலைமைச் செயற்குழு உறுப்பினர்களில் ஒருவருமான திரு. அ. தங்கத்துரை அவர்களை, இரண்டாயிரம் ரூபா ஆள் உறுதிப் பிணையில் விடுதலை செய்யுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் திருகோணமலை நீதவானுக்கு உத்தரவிட்டுள்ளது.

மூதூர் கிளிவெட்டியில் இடம் பெற்ற இனக்கலவரத்தையடுத்து கடந்த ஏப்ரலில் கைதுசெய்யப்பட்ட திரு. தங்கத்துரை தொடர்ந்து கடந்த ஆறு மாதங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

திரு. தங்கத்துரைக்கு பிணை மறுப்பதற்கு நியாயபூர்வமான காரணமெதுவும் சட்ட மா அதிபர் தரப்பில் காட்டப்படாததை யடுத்து, மேன்முறையீட்டு [illegible] றம், திரு. தங்க[illegible] பிணை வழங்கும் அனுமதியை பிறப்பித்தது.

திரு. தங்கத்துரையின் சார்பில் சட்ட மா அறிஞர் திரு. வி. எஸ். ஏ. புள்ளநாயகம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வாதாடினுர். அவருடன் சட்டத்தரணிகளான சிவா இராசரத்தினம், கே. வி. மகேந்திரன், திருமதி சாந்தினி [illegible] ஆஜராயினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ஈழப் பிரச்சினைக்கு இந்திய சஞ்சிகைகள்

# களம் அமைத்துக்கொடுக்கவேண்டும்!

## தவறினால் அவற்றைப் பகிஷ்கரிக்க நேரிடுமென தமிழ் இளைஞர்கள் போர்க்குரல்!

சஞ்சிகைகள் தடைசெய்யப்படுவதால் கலாசாரத் தொடர்பு துண்டிக்கப்படும். அது இன அழிவுக்கு முதற்படி, அதனால் தடை கூடாது என்கின்றனர் ஒரு சாரார். இந்திய சஞ்சிகைகள் பரப்புவது கலாச்சாரமல்ல. ஆபாசம் என்றும் இளம் பெண்களை அட்டைப் படத்தில் இட்டுக்கவர்ச்சி மூலம் வியாபாரம் நடத்துகின்றன என்றும் மறுசாரார் மறுத்துரைக்கிறார்கள். இந்திய சஞ்சிகைகள் மட்டும்தானா ஆபாசம் நிறைந்தவை! ஈழத்தில் ஆபாச சஞ்சிகைகள் இல்லையா? அன்னத்தைப் போன்று வாசகர்கள் தெரிவு இடம்பெற வேண்டும் என்கின்றனர் வேறு சிலர்.

தமிழ்ப் பெண்களை மட்டும் கவர்ச்சியாக இட்டு வந்த தமிழ் நாட்டுச் சஞ்சிகைகள் சில அண்மைக் காலமாக மேலைத்தேசப் பெண்களின் படங்களை குறை ஆடைகளுடன் பிரசுரிக்கும் அளவுக்கு தம்மை வளர்த்துக் கலாச்சார சேவை புரிகின்றன என்கின்றனர்.

இந்திய சஞ்சிகைகளைத் தடை செய்வது தமிழ் நாட்டு மக்களின் ஆதரவை இழக்க வேண்டிவரும் என்கின்றனர். யார் தமிழ் நாட்டு மக்கள் எனக் கேட்கின்றனர் மறுசாரார் பத்திரிகை முதலாளிகளா? அல்லது சாதாரண விவசாய தொழிலாள பாட்டாளித் தமிழ் மக்களா? என்கின்றனர் மறுசாரார்.

வெங்காயம், மிளகாய் இறக்குமதி தடை செய்யப்பட வேண்டும் எனக் கூக்குரலிடுகிறோம். இந்தியத் தமிழ் விவசாயிகள் பொது மக்கள் பாதிக்கப்படுகிறார்கள், அவர்களை ஆதுரிக்க வேண்டும்என்பதற்காகநாம் வெங்காயம், மிளகாயை இறக்க முடியுமா?

இந்திய சஞ்சிகைகளை நாம் பகிஷ்கரியாது ஆதரவு கொடுப்பதன் மூலம் நாம் அடையும் பலன் யாது? இலங்கை அரசிற்குப் பந்தம் பிடித்து ஈழத் தமிழர்கள் மீது அவை குதிரை விடுகின்றன. வியாபாரத்திற்காகச் சில தந்திரங்களைக் கைக்கொள்ளும் அச் சஞ்சிகைகள் பிறநாடுகளில் நடைபெறும் அரசியல் பிரச்சினைகளைப் பிரமாதமாக எழுதுகின்றன. அதிசய சம்பவங்களை அளக்கின்றன. அயல் நாடான தமிழ் ஈழத்தைப் பற்றி அவைகளுக்குக் கவலையில்லை. வியாபாரத்திற்காகச் சில பேட்டிகள்—சிங்கள அரசில் நோகாமல், பத்திரிகா தர்மம் வியாபாரம் அல்ல.

இலங்கைத் தமிழர் பற்றிய உண்மையான நிலைப்பாடு தமிழ்நாட்டுச் சாதாரண சனங்களுக்கு மட்டுமல்ல பல பெரியவர்களுக்கே தெரியாது. இலங்கையில் உள்ள இந்திய வம்சாவழித் தமிழர்களை வைத்துக் கொண்டு அதுமட்டுமே பிரச்சினையென்றும்— இலங்கையில் தமிழர்கள் போய் ஏறு குடிகள் என்றும் ஒரு தப்பெண்ணம் வியாபித்து விரிந்து கிடக்கின்றது தமிழ் நாட்டில்.

தமிழ்நாட்டில் இருந்து ஈழம்வந்த ஒரு தமிழ்ப் பெரியார் சொன்னார், "யான் சேய்நாட்டில் இருந்து தாய் நாட்டிற்கு வந்திருக்கிறேன்." ஆம் ஒரு சிலர் மட்டுமே தமிழ் ஈழம் தாய் நாட்டு தமிழர்களுக்கு— லெமூரியாக் கண்ட வரலாறு சான்று என உண்மையை உணர்ந்திருக்கிறார்கள்.

எது எவ்வாறாயினும் இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி இந்திய, தமிழ்நாட்டு மக்களுக்கு விளக்கியாக வேண்டும்.

இலங்கைத்தமிழர் பற்றிய தமது கருத்தை வெளியிடுவதற்கு இந்தியத் தமிழ் சஞ்சிகைகள் அஞ்சினாலும் செய்திகளையாகுதல் அவை வெளியிட்டாக வேண்டும். ஈழத் தமிழ்த் தலைவர்களுடைய கருத்துகள் அரசியல் எழுத்தாளருடைய கருத்துக்களை அவை பிரசுரித்தேயாக வேண்டும்.

அருகில் உள்ள இந்தியத் தமிழ்நாட்டு மக்களுக்கு— எமது உணர்வுள்ள சகோதரர்களுக்கு உணர்த்த முடியாத பிரச்சனைகளை நாம் வேறு நாட்டவருக்கு உணர்த்த முடியுமா?

கூரைஏறிகொல்லை பிடுங்கத் தெரியாதவன் வானம் ஏறி வைகுண்டம்போவானா?

எனவே, ஈழத்திற்கு இப்போ இறக்குமதியாகும்— ஈழத் தமிழர்கள் கைகொடுத்துக்கொண்டிருக்கும் சஞ்சிகைகளாதல் இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றிச் செய்தி வெளியிட வேண்டும். தமிழ்த்தலைவர்கள் அவற்றிற்கு இலங்கைத்தமிழர் பிரச்சனை பற்றிக் கட்டுரை எழுத வேண்டும்.

இறக்குமதியாகும் தமிழ் நாட்டு சஞ்சிகைகளில் மாற்றம்— இலங்கைத் தமிழர் பற்றிய செய்தி எதுவும் 1-1-1979 இற்கிடையில் வெளிவர ஆரம்பிக்கா விட்டால் அவற்றை பகிஷ்கரிப்பதற்கு உரிய நடவடிக்கையில் தமிழர்கள் இறங்க வேண்டும். இதைத் தவிர வேறு வழி இல்லை.

—நன்றி: இளைஞர் குரல்

—3-ம் பக்கத் தொடர்

போன்ற பெரியோரும் தவமிருக்க நாம் நமது பகுதியின் வெறும் பொருளாதார மேம்பாட்டுக்காக சிங்கள ஏகாதிபத்திய அரசுடன் ஒன்றிணையலாமா? ஒன்றிணைந்தால் எமது தமிழ் ஈழக்கோரிக்கை மட்டில் இதுகாலவரை வெளிநாடுகளில் மேற்கொள்ளப்பட்ட மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகளின் பயன் என்னவாகும்? அயல்நாடுகள் எமது தமிழ் ஈழ கோரிக்கை பற்றி எவ்விதம் எடைபோடும்? உள்நாட்டிலும் தமிழ்ஈழக்கோரிக்கை மட்டிலான ஆதரவும் அனுதாபமும் அற்றுப்போய் விடுமே.

சரி, அரசுடன் ஒத்துழைத்து எமது பகுதி பொருளாதாரம் ஓரளவு முன்னேறி விட்டதென்று வைத்துக் கொள்வோம். எமது குறிக்கோளாய் அமைந்துள்ள 'தமிழ் ஈழம்' அமைப்பதற்கு சமாதான வழிகளோ சாத்வீக போராட்டங்களோ யாவும் தோல்வியில் முடிந்தால் நாம் விரும்பியோ விரும்பாதோ இறுதியில் சாத்வீகமற்ற ஒரு போர் தமிழ்ஈழ மீட்சிக்காக ஏற்பட்டால், அப்போரில் வெளிநாடுகளும் தலையிட வேண்டி ஏற்பட்டால் போர்க்களமாக மாறப் போகும் எமது தமிழ் ஈழத்தின் வளர்ச்சியடைந்த பொருளாதார நிலை என்னவாகும்? எல்லாம் சீரழிந்து சின்னாபின்னமாகிவிடாதா? அப்படியான ஒரு யுத்தம் ஏற்படாதென்று எம்மால் உத்தரவாதமளிக்க முடியுமா? விடுதலை பெற்ற உலகின் பல நாடுகள் எமக்குப் படிப்பிப்பதென்ன?

எனவே வெறும் பொருளாதார கோட்பாட்டுக்காக மாவட்ட அமைச்சர் பதவியை ஏற்றுபுனிதமான ஒரு விடுதலை இயக்கத்தை பாழ்படுத்துவது மாத்திரமன்றி தமிழ் ஈழ விடுதலைக்கான போராட்டத்தைபல ஆண்டுகளுக்கு பின் தள்ளுவது புத்திசாலித்தனமானகாரியமல்ல.

### பொம்மைகளாக இருக்க முடியாது

ஆகவே பொருளாதார மேம்பாடு, எல்லைப்பிரதேச பாதுகாப்பு போன்ற சாத்தியமற்ற காரியங்களைக் காட்டி மாவட்ட அமைச்சர் பதவியை ஏற்பதில்லையாயின் எமது மதிப்பிற்குரிய பாராளுமன்ற உறுப்பினர்களான திருவாளர்கள் பூ. கணேசலிங்கம், தா. சிவசிதம்பரம் பேன்றோர் கூறுவது போன்று வெறும் பொம்மைகளாகச் — செயலற்றவர்களாக தமிழர் விடுதலைக் கூட்டணி பா. உக்கள் இருக்க முடியாது. சிறு அளவிலோ பெரிய அளவிலோ ஆயினும் தமிழ்ஈழபோராட்டத்தில் குதிக்க வேண்டும். சிறைச்சாலைகள் நிரம்ப வேண்டும். அல்லது அதற்கான பயிற்சிகளையும் கருத்தரங்குகளையும் கலந்துரையாடல்களையும் தமிழ் ஈழம் முழுவதும் பரவலாய் நடத்த வேண்டும். தொண்டர்களைச் சேர்க்க வேண்டும்.

தேர்தல் காலந்தில் நள்ளிரவு வரைக்கும் அதற்கு அப்பாலும் செயல்பட்டது போன்று, இயக்க போராட்ட முறைகளை விளக்கவும், திட்டங்கள் தீட்டவும், தொண்டர்களை தயார் நிலையில் வைக்கவும் பா. உ.க்களும் ஏனைய முன்னணித் தொண்டர்களும் முழுநேரமாக முன் வரவேண்டும். பாராளுமன்ற உறுப்பினர்கள் இடைக்கிடை பாராளுமன்றம் போய் தமிழீழபோராட்டத்தைப் பிரசாரம் செய்ய வேண்டுமேயொழிய சிங்கள சிறிலங்காவின் அரசாங்க இயந்திரம் சரிவர இயங்க ஆலோசனை கூறும் உபகுழுக்களில் அங்கம் வகித்து விடுதலைக்கான காலத்தை விரயமாக்குவது பாராட்டத்தக்கதல்ல த. வி. கூட்டணி பா. உக்கள் செலவிடும் ஒவ்வொரு நிமிடமும் தமிழ்ஈழ அமைப்புக்காக செலவிட்டு அதைத்தமிழ் இனத்துக்கு ஒரு முன்மாதிரியாகக் காண்பிக்க வேண்டும். அம் முன்மாதிரியைக் காணும் தமிழ் இனம்தான் தமிழ்ஈழ போராட்டத்திற்கு அணிவகுக்கும்.

அண்மையில் மட்டக்களப்பிற்கு பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா அவர்கள் சென்ற பொழுது கவிஞர் காசி, மாவை போன்ற இளந்தலை முறைகள் தமிழ் ஈழ விடுதலைக்கான ஆரம்ப பணிகளில் ஈடுபட்டமைக்காக விசாரணையின்றி மாதக்கணக்கில் சிறையில் வாட, மட்டுநகர் முதல்வர் த. வி. கூட்டணி துணைத் தலைவர் சிங்கள சிறீலங்காவின் பிரதமரை பகிரங்க மேடையில் வாழ்த்தி வரவேற்றுப் பேசுகின்றார். அவரது வாழ்த்துரைகள் தினசரி பத்திரிகைகளில் கொட்டை எழுத்தில் பிரசுரமாகிறது. இந்நிகழ்ச்சிகள் தமிழ் மக்கள் மத்தியில் எத்துணை சிந்தனைக் குழப்பத்தை உருவாக்குமென்பதைச் சம்பந்தப்பட்ட தலைவர்கள் உணர மறுப்பது மிக வேதனைக்குரியது. ஒரு புறம் போராட்டத்தை அடக்கி ஆள்வோருக்கு வாழ்த்துக்கூறுவதும் இராஜதந்திரமென்று கூறக் கூடியதா?

எனவே எதிர் காலத்தில் [illegible] தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களும் பா. உக்களும் நிதானமாகச் சிந்தித்துச் சிறந்த முடிவுகளை — தமிழ் ஈழ போர் வீரர்களான தமிழ் இளைஞர்களுக்கு மனக் குழப்பத்தையோ கசப்பையோ உண்டுபண்ணாத தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும்.

### பேரம் வேண்டாம் வீரம் வேண்டும்

தமிழ் ஈழம் தரமறுக்கும் சிங்களஅரசுகளுடன் பேரம் பேச வேண்டாம்!

தமிழ் ஈழப் போராட்டத்தைப் பின்தள்ளி வைக்கும் ஒத்துழைப்புப் பல்லவியும் வேண்டாம். அமைச்சர் பதவியும் வேண்டாம்.

குறுகிய கால தவணையில் தமிழ் ஈழ போராட்டத்தைத் திட்டமிட்டு நடத்துவோம்.

ஆகவே தமிழ்மக்களாகிய நாமும், தமவாழ் நாளெல்லாம் தமிழினத்திற்காக அர்ப்பணித்து நிற்கும் உண்மைத் தமிழ்த் தலைவர்கள் மீது நம்பிக்கை வைக்க வேண்டும். தங்கள் சொந்த நலன்களுக்காக தமிழர் கூட்டணி பா.உ.களை அணுகாது தமிழீழ விடுதலைக்கான வழிவகைகளை எடுத்துக் கூறும் அல்லது உதவி அளிக்கும் நோக்கத்துடன் அவர்களை அணுக வேண்டும். விசுவாசத்துடன் தமிழ் தலைவர்களுக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

அதேவேளை இயக்கத் தலைவர்களும் குறிப்பாக த. வி. கூட்டணி பா. உ. க்களும் குறுகிய காலத்திட்டமிட்டு தமிழீழத்தைப் பிரகடனப்படுத்த முயற்சிக்கவேண்டும். தமிழ் மக்கள், தம்மீது கொள்ளும் நம்பிக்கைக்கு முற்றிலும் பாத்திரவான்களாய் தமிழ் தலைவர்கள் இயங்கவேண்டும். தம் வாழ்க்கை முழுவதையும் தமிழ் ஈழத்துக்காக தியாகம் செய்த எத்தனையோ தமிழ் இளைஞர்கள் விடுதலை இயக்கம் திசைமாறிப் போவதாய் உணர்ந்தால் அவர்களின் மனநிலை என்னவாகும்? விரக்தியின் விளிம்புக் கல்லவா தள்ளப் பட்டு விடுவார்கள். இதன் விளைவுகள் எத்தனை விபரீதங்களை உண்டுபண்ணக்கூடும்.

ஆகவே தயவுசெய்து தலைவர்களே— தமிழ்தாயின் காவலர்களே— தமிழீழத்தின் முன்னணிச் சிற்பிகளே உங்களை நம்பினோம். எம் நம்பிக்கையைப் பாழ்படுத்திவிடாதீர்கள். நம்பிக்கைத் துரோகம் செய்திடாதீர்கள். விடுதலை இயக்கத்தைக் கட்டிக்காத்திடுங்கள். தமிழ் ஈழத்தை நோக்கி எம்மையெல்லாம் வழிநடத்திச் செல்லுங்கள். சந்தர்ப்பவாத சுயநலமிகளின் சூழ்ச்சிகளுக்குப் பலியாகிவிடாதீர்கள். தமிழீழ சுதந்திரதேவியை சிங்கள ஏகாதிபத்தியத்திட மிருந்து மீட்டிடுவோம்.

வாழ்க ஈழத் தமிழினம்!
வளர்க அதன் ஒற்றுமை!!


**சுதந்திரன் சந்தா**

| | |
|---|---|
| ஓராண்டு | ரூபா 50-00 |
| அரையாண்டு | ரூபா 25-00 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கென்யாவின் விடுதலை வேங்கை

## ஜோமோ கென்யாட்டா!

**'எங்கள் சாம்ராஜ்ஜியத்தில் சூரிய அஸ்தமனமே கிடையாது' என்று வெள்ளை ஏகாதிபத்தியம் ஒரு காலத்தில் எக்காளமிட்டு வந்தது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்ககாலத்தில் இருந்து மிகத்தீவிரமாக ஒவ்வொரு தேசிய இனங்களிலும் ஏற்பட்ட விழிப்புணர்ச்சி தேசிய விடுதலை இயக்கங்களாக உருப்பெற்று தம்மை அடக்கி ஆண்டு கொண்டிருந்த ஏகாதிபத்திய இனங்களை விரட்டியடித்து விடுதலை பெற்றதை வரலாறுகளாகப் படித்துக் கொண்டிருக்கிறோம்.**

எந்தவொரு நாட்டினமும் இன்னொரு நாட்டினத்தையும் அவ்வினத்திற்குசொந்தமான நிலத்தையும் என்றுமே அடக்கி ஆண்டு கொண்டிருக்க முடியாது.

'நாடுகள் சுதந்திரத்தை விரும்புவதும் தேசங்கள் விடுதலையை விரும்புவதும், மக்கள் புரட்சியை விரும்புவதும் எந்த சக்திகளாலும் தடுத்து நிறுத்த முடியாத வரலாற்றுப் போக்குகள் என்று தெளிவாக எடுத்துரைக்கிறார் தோழர் மாவோ.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில்கூட இருண்ட கண்டம் என்று அழைக்கப்பட்டுவந்த ஆப்பிரிக்கக்கண்டத்தில் எழுச்சிபெற்ற தேசிய இனங்கள்' தங்களது நாடுகளை விடுவித்துக்கொண்டும், விடுவிக்கப் போராடிக் கொண்டிருப்பதையும்பார்க்கிறோம்.

இன்று தமிழீழம் எப்படி ஏகாதிபத்திய சிங்களச் சிறீலங்காவின் காலனி நாடாக இருக்கிறதோஅதுபோன்றே கென்யாவும் ஒரு கால கட்டத்தில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் காலனியாக இருந்து வந்தது. கிழக்கு ஆப்பிரிக்காவிலேயே இயற்கை வளங்கள் மிகுந்த எழில் மிக்க நாடு கென்யா. அந்நாட்டின் தேசிய இனமான 'சிக்குயு'இனத்தவர்கள் தங்கள் நாட்டை 'கிரேநியாகா' என்று சொல்வார்கள். மர்மம் நிறைந்த இறைவனின் பீடம்' என்பது இதற்குப் பொருள் (ஈழம் என்றால் பொன் விளைந்து பொலிந்த நாடு என்று பொருள் படுவது போல).

இந்த நாட்டு மக்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டு மூச்சிருந்தவரை ஆட்சி புரிந்தவர் தான் ஜோமோ கென்னியாட்டா. நன்நாகரீகம் அடைந்திராத காட்டு மிராண்டிகள் இனத்தில் தோன்றிய கென்னியாட்டா, இளமையில் மூடநம்பிக்கைகளின் முழு உருவமாகத் திகழ்ந்த இவரது, பூசாரித் தொழில் செய்து வந்த தாத்தாவுக்கு எடுபிடியாளாக இருந்து வந்தார்.

எப்படி வெறிச் சிங்கள ஏகாதிபத்தியத்தின் இனவெறித்தாக்குதல்கள் தமிழ் மக்களின் ஒற்றுமைக்கும் எழுச்சிக்கும் உதவியதோ அதுபோன்றே வெள்ளை ஏகாதிபத்தியத்தின் இனவெறி, சுரண்டல், திறவெறி என்பன கென்னியாவில் காட்டு மிராண்டிகளாக இருந்த 'சிக்குயு' தேசிய இனமக்களை சிந்திக்கவும் எழுச்சி பெறவும் வைத்தது.

கென்னியாவில் வெள்ளையரின் குடியேற்றங்கள் படிப்படியாக நடந்து கொண்டிருந்தகாலை ஆடு மாடுகளை மேய்த்து வந்த கென்னியாட்டா ஒரு ஸ்கொட்டிஷ் மிஷன் பள்ளியில் சேர்ந்து ஆங்கிலம் எழுதப்படிக்கக் கற்றுக் கொண்டார். இம்மாதிரி ஆங்கிலம் அரைகுறையாக எழுதப்படிக்கத் தெரிந்தவர்களை வெள்ளையர்கள் தங்கள் எடுபிடி வேலைக்கு மட்டுமே வைத்துக் கொண்டார்கள். ஆனால் வெள்ளையர் வசிக்கும் பகுதிகளுக்கோ, அவர்களுடைய உணவு, உல்லாச விடுதிகளுக்கோ கறுப்பர்கள்செல்லக் கூடாது. மீறினால் மீறுவோர் கடுமையான கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டனர்.

ஓரளவு ஆங்கிலம் எழுதப் படிக்கத் தெரிந்த கென்னியாட்டா சிறிது காலம் நைரோபியில் ஒரு எழுத்தாளராகப் பணிபுரிந்தார். பின் மின்சார மீட்டர் குறிப்பவராகவும் வேலைபார்த்து வந்தார். இந்தக் காலத்தில் தமது அறிவுப் பசியைப் படிப்படியாகத் தணித்து வந்த கென்யாட்டா சங்கீதம், சித்திரம், அரசியல் போன்றதுறைகளில் தம்மை நன்கு வளர்த்து வந்தார்.

கறுப்பினத்தவர்கள் மீதான வெள்ளையினத்தவர் கொடுமைகள் பெருக பெருக கறுப்பர்கள் மத்தியில் விடுதலை உணர்வுகள் வேகமாக வளர்ந்தது. அது வெகு விரைவிலேயே புரட்சிகரமான பயங்கரவாத தலைமறைவு இயக்கமாக வடிவெடுத்தது. 'மாவ்மாவ்' என்பதே இவ்வியக்கத்தின் பெயர்.

வெள்ளையினத்தவர் இழைத்த கொடுமைகளைக் கண்ட கென்னியாட்டா "காட்டு மிராண்டியாய் வாழ்ந்த காலத்திலாவது மனிதன் மனிதனாய் வாழ்ந்தான். ஆனால் இப்பொழுதோ கடிவாளம் பூட்டிய குதிரையைப்போல் வெள்ளையன் விரட்டுகின்ற இடமெல்லாம் ஓடும் அடிமையாக்கப்பட்டிருக்கிறோம்" என்று நொந்து கிளர்ந்தெழுந்தார்.

'மாவ் மாவ்' இயக்கத்தோடு வெள்ளையர் இவரை சம்பந்தப்படுத்தினார்கள். இதுதானே தனக்கு எதிரானவர்களை வஞ்சம் தீர்த்துக் கொள்ள ஏகாதிபத்தியங்கள் கையாண்டு வரும் வழி!

வெள்ளை ஏகாதிபத்தியம் தம் நாட்டைச் சுரண்டத் தொடங்கிய இருபத்தைந்தாண்டுகளுக்குள்ளாகவே கென்னியாவின் 'சிக்குயு' இனத்தவர்கள் வெள்ளையர் பாணியில் அரசியல் இயக்கம் ஒன்றைத் தொடங்கினார்கள். கென்னியாட்டா இதில் சேர்ந்து உழைத்து படிப்படியாக உயர்ந்தார். 'சிக்குயூ' மொழியில் செய்தி ஏடு ஒன்றையும் நடத்தினார்.

1929ல் தம்தோழர் ஒருவரோடு லண்டன் சென்ற கென்னியாட்டா அங்கு பிரிட்டிஷ் அரசிடம் தம் மக்களின் குறைகளை எடுத்து வைத்தார். அரசு அதற்குத் தலைசாய்க்கவில்லை. இதுதானே ஏகாதிபத்தியங்களுக்கு இயற்கையாக அமைந்த திமிர்த்தனம்.

இதன்பின் கென்னியாட்ட கொஞ்சகாலம் புகழ்பெற்ற நீக்ரோ பாடகரும், பொதுவுடமை அனுதாபியுமான பால்ரோப்ஸனோடு தங்கியிருந்தார். இதற்கு முன்பே பொதுவுடமை நாடுகளுடன் தொடர்பேற்படுத்திக் கொண்ட கென்னியாட்டா இவருடன் இருமுறை சோவியத் ஒன்றியத்திற்கு பயணம் செய்தார். அங்கேமாஸ்கோ லெனின் பள்ளியில் முறையாக புரட்சி முறைகளைப் பயின்றார்.

1931ல் மறுபடியும் லண்டன் சென்ற கென்னியாட்டா அங்கு சுமார் பதினைந்தாண்டுகள் தங்கி லண்டன் பொருளியல் பள்ளியில் கல்வி பயின்றார். 1938ல் தம்முடைய 'சிக்குயு' இனத்தைப் பற்றிய நூல் ஒன்றை வெளியிட்டார்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின் ஜோமோ கென்னியாட்டாவும் கனநாட்டின் முந்தைய தலைவர் குவாமே என்க்ருமாவும் வேறு பல ஆப்பிரிக்கத் தலைவர்களும் லண்டனில் ஒன்றுகூடி ஆப்பிரிக்க விடுதலை இயக்கத்தைத் தொடங்கினார்கள்.

1946ல் பதினைந்து ஆண்டு [illegible] திரும்பிய கென்னியாட்டா தமது தாயகம் எந்தவொரு முன்னேற்றமும் அடையாத நிலையில் இருப்பதைக் கண்டார். நாட்டிலே பிரச்சினைகள் மலிந்து கிடந்தன. வெள்ளை ஏகாதிபத்தியம் தம்மை மட்டுமே வளர்த்து கொண்டு வந்திருந்தது. ரத்தத்தில் கையெழுத்திட்டு உறுதி மொழி எடுத்துக் கொண்ட உறுப்பினர்களைக் கொண்டிருந்தபயங்கரவாத 'மாவ் மாவ்' இயக்கம் ஓங்கியிருந்தது.

சரியான ராஜதந்திரமும், போர்த்தந்திரமும் ஒருங்கே பயின்று, சிறந்த பேச்சாற்றல் பெற்று வந்திருந்த கென்னியாட்டா தமது வீட்டில் புரட்சிக்காரர்களின் கறுப்பு, சிவப்பு, பச்சை நிறங்களில்அமைந்த மூவண்ணக் கொடியை ஏற்றி, வெள்ளை ஏகாதிபத்தியத்திற்கு சிம்மசொப்பனமானார். பெயருக்கேற்ப, எரியீட்டியாகத் திகழ்ந்தார். (சிக்குயூ மொழியில் 'ஜோமோ' என்றால் 'எரி ஈட்டி' என்பது பொருள்)

'மாவ் மாவ்' இயக்கத்தைக் கைவிடும்படி வெள்ளை ஏகாதிபத்தியம் வற்புறுத்தியது— மிரட்டியது. பதிலுக்கு கென்னியாட்டா அரசியல் சீர்திருத்தங்களை மட்டுமே முன்வைத்தார். ஏகாதிபத்தியம் செவிசாய்க்கவில்லை. 'மாவ் மாவ்' இயக்கம் வளர்ந்தது.

கென்னியாட்டா இறுதிப் போருக்குத் தயாரானார். இது நம் தாயகம். இதை மீட்க உங்கள் ரத்தத்தை சிந்தத் தயங்காதீர்கள் —என்று தம்மக்களுக்குஅறைகூவல் விட்டார். உணர்ச்சிப் பிழம்பான இவரது பேச்சை கேட்கும்போது மக்கள் கூட்டம் அழுதது, வெறி கொண்டது, கட்டுண்டது. புரட்சித் தீ புகையத் தொடங்கியது.

1952ல் எரிமலையென புரட்சி வெடித்தது. அடக்கி, ஒடுக்கி, நசுக்கி ஆட்சி செலுத்தி வந்த வெள்ளையர்கள் புரட்சிக்காரர்களால் வெட்டி யெறியப்பட்டனர். அவர்களது உடைமைகள் கொள்ளையடிக்கப்பட்டன— சூறையாடப்பட்டன. ஏகாதிபத்தியத்திற்கு எடுபிடிகளாகவும் கைக்கூலிகளாகவும் இருந்துஎட்டப்பன்தொழில் செய்து வந்தகறுப்பர்களின் வீடுகளும் இரவோடிரவாக கொளுத்தப்பட்டன.

புரட்சியை ஒடுக்கிட பெரும் ஆங்கிலப்படை வந்தது. ஏகாதிபத்தியம் எல்லாப் போர்த்தந்திரங்களையும் கையாண்டது. தாராளமாக போர்க்கருவிகள் பயன்படுத்தப்பட்டன— குண்டு மழை பொழிந்தது. 'மாவ் மாவ்' இயக்கத்தினர் பின்வாங்கி காடுகளில் தலைமறைவாயினர். ஆங்கிலப்படை காட்டுக்குள் புகுந்து வேட்டையாடியது. 'மாவ் மாவ்' இயக்கம் அடிப்படையில் வெள்ளையர் எதிர்ப்பு இயக்கம். ஆயினும் புரட்சியில் மாண்ட ஐரோப்பியர்கள் நூறு பேர் மட்டுமே. இனத்துரோகிகளான கறுப்புக் கூலிப்படையினர் இரண்டாயிரம் பேர் மாண்டனர். 'மாவ் மாவ்' இயக்கத்தில் மாண்டவரோ பன்னிரண்டாயிரம் பேர். ஆனாலும் எழுச்சி பெற்ற 'சிக்குயு' தேசிய இன மக்களின் விடுதலைவேட்கைஅடங்கவில்லை.

கென்னியாட்டா கைதானார். அவர் மீது வழக்குத் தொடரப்பட்டது. வழக்கின் இறுதியில் கென்னியாட்டா கென்னிய தேசிய இனத்தின் இணையற்ற தலைவர் என்பது உறுதியானதோடு 'மாவ்மாவ்' பயங்கரவாதத்திற்கு இவர் காரணமல்ல என்பதும் வெளியானது ஆனாலும் இவருக்கு ஏழு ஆண்டுகள் கடும் உழைப்பு தண்டனைகொடுக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

புரட்சியை ஒடுக்க முடியாது என்பதையும் விடுதலை வெறியைத் தணிக்க முடியாது என்பதையும் தெரிந்து கொண்ட பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் சில சீர்திருத்தங்களை, சில சலுகைகளைக் கென்னிய மக்களுக்கு வழங்கியது. விடுதலை உணர்வுகளை மழுங்கடிக்க ஏகாதிபத்தியங்கள் கையாளும் இத்தந்திரத்திற்கு கென்னிய மக்கள் பலியாயினர். விடுதலை இயக்கத்தின் வேகம் தடைப்பட்டது.

வறண்ட பாலைவனமும், முரட்டுப் பாறைகளும்சூழ்ந்திருந்த சிறையின்கொடுமைகளை அனுபவித்ததால் 28 மாத தண்டனைக்குறைப்பு கிடைத்தும், கென்னியாட்டாவை விடுதலை செய்யாமல் வேறோர்இடத்தில்சிறை வைத்து அவரைப்பற்றிய தவறான செய்திகளை மக்கள் மத்தியில் பரப்பத் தொடங்கியது வெள்ளை ஏகாதிபத்தியம். 'கென்னியாட்டா இருளுக்கும் இறப்புக்குந்தான் தலைவன்' என்று வெள்ளை ஏகாதிபத்திய கவர்னர் கென்னியாட்டாவை இழிவுபடுத்தினார். இதனால்மக்கள் மீண்டும் கொதித்தெழுந்தார்கள். 'மாவ்மாவ்' இயக்கம் மீண்டும் வன்முறையில் இறங்கியது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இறுதியாகப் பணிந்தது. வேறு வழியின்றி வெளியேறியது.

கென்னியாட்டா விடுதலையானார். விடுதலையான கென்னியாவின் முடிசூடா மன்னராகத் திகழ்ந்து வந்த கென்னியாட்டா தமது 78 ஆவது வயதில் சமீபத்தில் காலமானார்.

வாழ்க கென்னியாட்டா புகழ்!

வீழ்க ஏகாதிபத்தியங்கள்!

பரிமளா மணாளன்
கோவை—தமிழ் நாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “தமிழீழம் ஒன்றே நமது குறிக்கோளாக இருக்கட்டும்”

## திருச்செல்வம் பொதுப்பணி மன்றம் தீர்மானம்!

திருச்செல்வம் பொதுப் பணி மன்றத்தின் ஆலோசனைக் கூட்டம் மன்றத் தலைவர் புங்கைநகர் இ. வே. நடராஜா தலைமையின் கீழ் மன்றப் பணிமனையில் மாலை 5-30 மணியளவில் நடைபெற்றது. அவ்வமயம் கீழ் கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது.

(அ) தமிழர் விடுதலைக் கூட்டணியில் சிதைவு ஏற்பட்டுவிட்டதாக சில விஷமிகளின் துஷ்பிரசாரத்துக்கு வடக்கிலோ, கிழக்கிலோ, மலையகத்திலோ வாழ்கிற தமிழ்மக்கள் செவிகொடுக்க வேண்டாம். வட்டுக் கோட்டை மாநாட்டில் ஏற்றுக்கொண்ட உயிர் நாடியாகிய தமிழ் ஈழத்தை அடைவதே நமது இறுதி சங்கற்பமாக இருக்கவேண்டும் என்று தமிழர் விடுதலைக்கூட்டணி தமிழ் இளைஞர்பேரவை, மகளிர் மன்றம், மொழிவழித் தொழிற் சங்கம் இலங்கைத் தொழிலாளர் கழகம் போன்ற இலட்சிய குறிக்கோள் உடையதாபனங்களை எமது மன்றம் வேண்டிக் கொள்கிறது.

(ஆ) தென்னிலங்கையில் வாழும் வடக்கு கிழக்கு வணிகப் பெருமக்கள் தமது வணிகப் பெருக்கத்தை வடக்கிலும் கிழக்கிலும் சென்று நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்றைய ஒற்றை ஆட்சியில் வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் பாரம்பரிய மார்நிலத்தில் அந்நியரை குடியேற்றும் முயற்சி, பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்துவதுமட்டுமன்றி நமது மண் உரிமை, மொழி, கலை கலாச்சாரம் அத்தனையும் பறிபோய் விடும் என்பதை நன்கு உணர்ந்து நமது தமிழ் மக்கள் செயற்பட வேண்டும் என்று நமது மன்றம் கேட்டுக்கொள்கிறது.

(இ) இம்மாதம் 26ம் திகதி தன்மானத் தலைவரும் தமிழ் இனத்தின் நாட்டு எல்லையை வரையறுத்து தந்தவருமாகிய அமரர் திருச்செல்வம் கியூ. சி. அவர்களின் நினைவாஞ்சலித் தினத்தை மிக விமரிசையாக நடத்துவது எனவும் எவ்வித கட்சி பாகுபாடு அற்ற முறையில் அழைப்புக்கள் அனுப்புவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இவ்வைபவத்தை முன்னின்று நடத்த விசேட குழு அமைக்கப்பட்டுள்ளது நிர்வாகச் செயலாளர் ம. சிவசாமி இ. வே. நடராஜா, க. கதிர்காமநாதன், தியாகி எஸ். எம். பாரதமுத்து ஆகியவர்கள் முன்னின்று நடத்த நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

**நீம் சுகாதார தூபம்**

வேம்பிலிருந்து நவீன முறையில் தயாரிக்கப்பட்ட நீம் சுகாதார தூபம் வீட்டிலுள்ள நுளம்பு, பூச்சி, புழு ஆகியவற்றை நீக்கி நறுமணம் கமழச் செய்கின்றது. விலை சதம் 25 மட்டுமே.

**மில்க்வைற் யாழ்ப்பாணம்**

**கெப்பிட்டல்** கடைசி வாரம்

மரிக்கார் ராமதாஸ், ஹெலன் குமாரி, சிவராம், ராஜகோபால் நடித்த-

**ஏமாளிகள்**

**கிங்ஸ்லி** (கொழும்பு) கடைசி வாரம்

சிவாஜி கணேசன் ஜெயலலிதா சந்திரபாபு நடித்த-

**நீதி**

[ புதிய பிரதி கலர் ]

**லிடோ** (யாழ்நகர்) 3-வது வாரம்

**எங்கள் தங்க ராஜா**

**விஜயா** (மட்டுநகர்)

**அநுராகம்**

**கெயிட்டி** [கொட்டாஞ்சேனை]

பிருதிவி ராஜ்கபூர் திலிப்குமார், மதுபாலா, அஜித் - நடித்த -

**அக்பர்**

[ நடனங்கள் ரெக்னிக் கலர் ]

**செல்லமகால்** 2-வது வாரம்

எம். என்: சிவராம், எஸ். என். தனரட்ணம் விஸ்வநாதராஜா, சந்திரகலா, அஜேஜா, மாஸ்டர் ஹைஜி, செல்வம் பொஸ்கோ நடித்த -

**அநுராகம்**

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் மகாத்மா காந்தி வீதி 15ம் இலக்கத்திலுள்ள சுதந்திரன் அச்சகத்தில் 1978 ம் ஆண்டு நவம்பர் மாதம் 12ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org